G.C.E. (A/L) 1987
Physics: VARNAM
நடைபெறுகின்றது.
திங்கள், வெள்ளி;
3-4 ELECTRICITY
திங்கள், வெள்ளி;
4-5 MECHANICS
New Master
Institute
B.M.C. Lane, JAFFNA.

# சஞ்சீவி

விலை ரூ 2/-

அறிவு - ஆக்கம் - அபிவிருத்தி

DAY CLASS
A/L PHYSICS
MECHANICS
ஆரம்பம் - 1-12-86
திங்கள் காலை 7-30 மணி
MON.-FRI - 7- 30A.M.
by
SATHIYASEELAN
NEW MASTER
INSTITUTE
B.M.C. Lane, JAFFNA

மலர்:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு கார்த்திகை மீ 27 உ. சனிக்கிழமை ஹிஜ்ரி 1407 ரபியு ஆகிர் பிறை 10 (13-12-1986) SANJEAVY. REGENERATIVE TAMIL WEEKLY சிகரம் :47

கருத்துக் கலசம் — மயூரா

## வரலாற்றுப் போர்

ஈழத்தில் பாடல் பெற்ற மூன்று சிவ ஸ்தலங்கள் உள்ளன. அவற்றில் கோணேஸ்வரமும் ஒன்று. கோணேஸ்வரம் அமைந்திருப்பது திருகோணமலையில்.

திருகோணமலையின் சரித்திரச் சான்றுகளைச் சேகரிப்பதில் இந்தியா தீவிர அக்கறை செலுத்தி வருகிறது.

திருகோணமலைச் சரித்திரத்தில் இந்தியா அக்கறை காட்டுவது காரணத்தோடு தான்.

இனப் பிரச்சினைத் தீர்வில் முக்கிய இடம் வகிப்பது திருமலை. அதனைச் சிங்களப் பிரதேசமாகக் காட்டுகிறது ஸ்ரீலங்கா அரசு. ஆனால் தமிழர்களின் பிரதேசம் என்பது தான் சரித்திரம். இதில் எது உண்மை என்பதை தானே நேரில் அறிந்துகொள்வதற்காகவே இந்தியா சரித்திரச் சான்றுகளைச் சேகரிக்க ஆர்வம் காட்டியிருக்கிறது.

ஒரு நாட்டின் மகத்துவத்தை மட்டுமன்றி அதன் பாரம்பரியத்தை, பண்பாட்டை, கலாசாரத்தை, சமூக அமைப்பை எடுத்தியம்புவது சரித்திரம் அல்லது வரலாறு.

தமது நாட்டின், இனத்தின் வரலாற்றை ஒவ்வொரு பிரசையும் அறிந்திருக்க வேண்டியது அவசியம். ஆனால் எமது பிள்ளைகளுக்குச் சரியான சரித்திரம் புகட்டப்படவில்லை.

பெரும்பான்மையினர் தம்மை உயர்த்தி காட்டுவதற்கு, தமக்குச் சார்பாக எழுதிய சரித்திரங்களையே, புரட்டல்களையே பாடப் புத்தகங்களில் எழுதுகிறார்கள்.

ஆகையால் —



தமிழரின் வரலாற்றைக் கூறும் நூல்கள் இப்போது அவசியம். அவற்றை அடிப்படையாகக்கொண்டு தமிழ் மண்ணில் உள்ள பாடசாலைகளில் சரித்திரம் புகட்டப்பட வேண்டும்.

எமது இனத்தைப் பாதுகாப்பது எவ்வாறு முக்கியமோ, வரலாற்றைப் பாதுகாப்பதும், அதனை இளம் சந்ததியினருக்குப் புகட்டுவதும், அத்துணை பிரதானமானதாகும்.

எனவே—

சரித்திரப் புரட்டல்களை எதிர்ப்பதற்கான ஓர் இயக்கமும், போராட்டமும் இப்போது அவசியம். அது உடன் ஆரம்பிக்கப்படவேண்டியதாகும்.

இதில் சரித்திரத்தைத் துறைதோயக் கற்ற எம்மவர்கள் உடன் இறங்கிப் போரில் குதிக்கவேண்டும்.

★ பெண்கள் பேரணியின் முடிவில் நடைபெற்றபொது கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட படங்கள். (கூ) ★

நட்பு நாட்டுடன் இலங்கை

# பாதுகாப்பு ஒப்பந்தம் செய்ய இஸ்ரவேல் சிபார்சு

## கொழும்புப் பேச்சின் விவரம் இதோ

சஞ்சீவியின் சிறப்புச் செய்தி

கொழும்பு, டிச. 13

நட்பு நாடு ஒன்றுடன் பாதுகாப்பு உடன்படிக்கை ஒன்றை இலங்கை செய்து கொள்ள இதுவே சரியான சந்தர்ப்பம் என்று இஸ்ரவேல், இலங்கைக்கு சிபார்சு செய்துள்ளது.

இஸ்ரவேல் ஜனாதிபதி செயிம் ஹெர்ஸோக் தமது கொழும்பு விஜயத்தின் போது இந்த ஆலோசனையை ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுக்கு கூறியிருந்ததாக ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கையின் இறைமைக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. இதைத் தவிர்க்க நட்பு நாடு ஒன்றுடன் அது பாதுகாப்பு உடன்படிக்கை ஒன்றை செய்து கொள்ளவேண்டும்.

அப்படிச் செய்து கொள்வதற்கு இதுவே சரியான சந்தர்ப்பம்.

இப்படி இஸ்ரவேல் ஜனாதிபதி, திரு. ஜெயவர்த்தனாவுக்குத் தெரிவித்தார் என்று ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

அரசுப்படைகள் தீவிரவாதிகளுக்கு எதிராக எடுத்துவரும் இராணுவ நடவடிக்கைகள் யுத்ததந்திரோபாயங்கள் முதலியன குறித்து அப்பேச்சுக்களின் போது இஸ்ரவேல் ஜனாதிபதியுடன் கூட வந்த அந்நாட்டு பாதுகாப்பு அதிகாரிகளுக்கு இலங்கையின் சார்பில் விளக்கமளிக்கப்பட்டது.

இஸ்ரவேலுடன் முழு அளவில் ராஜதந்திரத் தொடர்புகளை ஸ்தாபிக்க வேண்டும் என்று இஸ்ரவேல் ஜனாதிபதி பேச்சுக்களின்போது கேட்டுக் கொண்டார் என்றும்,

அது பற்றி தீர்மானிக்க தற்சமயம் உகந்த காலம் அல்ல என்று இலங்கை தரப்பில் தெரிவிக்கப்பட்டதாக அவ் வட்டாரங்கள் மேலும் கூறின. (அ-எ)

## மன்னார் கடற்பகுதியில் தீவிர கண்காணிப்பு

கொழும்பு, டிச.13

புத்தளம், மன்னார் கடல் பகுதிகளில் பாதுகாப்பைப் பலப்படுத்தும் பணியில் இலங்கைக் கடற்படை ஈடுபட்டுள்ளது.

இதற்காக தென்கொரியாவில் இருந்து விமானந்தாங்கிக்கப்பல் ஒன்று வாங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிகிறது.

இதனிடையில் தெரிவு செய்யப்பட்ட முந்நூறு கடற்படைச் சிப்பாய்கள் மன்னாருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (உ-ஐ-எ)

சினவெடியால் வந்த வினை:

## வவுனியா நகரில் தொடர்ந்து வேட்டுகள்

யாழ்ப்பாணம். டிச. 13

வவுனியா நகரில் வியாழக்கிழமை இரவு முழுவதும் தொடர்ந்து துப்பாக்கிப் பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்டன.

வவுனியா நகரில் பொலீஸ் நிலையப் பகுதி, ரயில்வே நிலையத்துக்கு அருகில் உள்ள பகுதி, சந்தை ஆகிய மூன்று பகுதிகளிலும் அமைந்துள்ள இராணுவ முகாம்களிலிருந்தே தொடர்ந்து துப்பாக்கிப் பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதன் காரணமாக வவுனியா ஆஸ்பத்திரிக் கட்டடமும், வைத்திய அதிகாரியின் பங்களாவும் சேதமடைந்தன.

வவுனியா நகரை அண்டியுள்ள வயல்வெளிப் பகுதியில், இரவு பத்து மணி அளவில் சினவெடி ஒன்று வெடித்ததையடுத்தே சிப்பாய்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர் என்று கூறப்படுகிறது.

பத்து மணிக்கு ஆரம்பித்த துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் அதிகாலை வரை நீடித்ததாகத் தெரிய வருகிறது.

ஆஸ்பத்திரி நோயாளர்களும் பயம் காரணமாக தமது கட்டிலின் கீழ் படுத்துக்கொண்டனர்.

சம்பவம் பற்றி இராணுவ உயரதிகாரிகள் விசாரணை நடத்தி வருவதாகவும் தெரிய வருகிறது. (உ-10)

### சுபநேரம்

13—12—1986
சனிக்கிழமை
சுபநேரம்:
3.20 முதல் 4.50 வரை ராகுகாலம்.
9.20 முதல் 10.50 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
திருவெம்பாவை ஆரம்நாள்
சனிப் பிரதோஷ விரதம்

## தாலிகட்ட தயாரான மாப்பிள்ளை கைது!

கல்முனையில் படையினர் செயல்

அம்பாறை, டிச. 13

காலை 7 மணிக்கு முகூர்த்தம்! ஆனால் காலை 5 மணிக்கே மாப்பிள்ளை ஆயுதபடையினரால் கைது செய்யப்பட்டார்.

இச் சம்பவம் கல்முனை இரண்டாம் குறிச்சியில் இடம்பெற்றது.

இத்துரதிருஷ்ட மாப்பிள்ளையின் பெயர் இளையதம்பி சாந்தகுமார்.

சாந்தகுமாரைக் கைது செய்த ஆயுத படையினருக்கு, உறவினர்கள் விவரத்தைத் தெரிவித்தனர்.

அவர் மாப்பிள்ளை. இதோ மணவறை. இன்னும் இரண்டு மணித்தியாலங்களில் முகூர்த்தம். பெண்ணுக்குத் தாலிகட்டவேண்டும்- இப்படி எல்லாம் படையினருக்குத் தெரிவிக்கப்பட்டது.

படையினர், மணவறையைச்சுற்றிப் பார்த்தனர்.

ஆனால் மாப்பிள்ளையை முகாமுக்கு அழைத்துச் செல்லத் தவறவில்லை.

மணவீடு, சோக வீடாக மாறியது. (உ-எ-14)

## தமிழ்நாட்டில் தீவிர பாதுகாப்பு ஏற்பாடு

சென்னை டிச, 12

இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி வன்முறைச் சம்பவங்கள் தமிழ் நாட்டில் அதிகரிப்பதைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசு பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பலப்படுத்தி உள்ளது.

வெடிமருந்து விற்பனைக்குகட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில், மத்தியமாநில அரசு அலுவலகங்களுக்குள்ளும் வங்கி அலுவலகங்களுக்குள்ளும் நடமாடுவதற்குக் கட்டுப்பாடு கொண்டு வரப்பட்டுள்ளது.

இதனிடையே கல்லெறிச்சம்பவங்கள் தொடர் (8ஆம் பக்கம் பார்க்க)

இலங்கை கடற்படைச் சிப்பாய்களுக்கு

## நீருக்கு அடியில் போர் புரிய இஸ்ரவேலில் விசேட பயிற்சி

கொழும்பு, டிச. 13

இலங்கை கடற்படைச் சிப்பாய்களுக்கு நீருக்கு அடியில் போர்புரிவதற்கான (Frogmen) பயிற்சிகளை இஸ்ரவேல் நிபுணர்கள் இஸ்ரவேலில் வைத்து அவசர அவசரமாக வழங்குவர்.

இலங்கை ஆயுதப் படையினருக்கு இராணுவப் பயிற்சிகள், பீரங்கிப் படகுகள் ஆகியவற்றை வழங்குவதை துரிதப் படுத்துவதற்கும் இஸ்ரவேல் அரசு சம்மதித்துள்ளது.

இஸ்ரவேல் ஜனாதிபதி செயிம் ஹெர்ஸோக் அண்மையில் கொழும்புக்கு விஜயம் செய்து ஜனாதிபதி ஜெயவர்த்தனவுடன் நடத்திய பேச்சுக்களின்போது இவை சம்பந்தமான உடன்பாடு காணப்பட்டதாக ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

இஸ்ரவேல் பாதுகாப்பு அமைச்சின் 15 உயர் அதிகாரிகள் ஜனாதிபதி ஹெர்ஸோக்குடன் கொழும்பு வந்திருந்தனர்.

அப்போது நடைபெற்ற பேச்சுக்களில் தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலியும் கலந்துகொண்டார்.

இலங்கை இராணுவத்தினருக்கு வழங்கப்படும் பயிற்சிகளைத் துரிதப் படுத்தும்படியும் —

ஆடர் செய்யப்பட்ட நவீன பீரங்கிப் படகுகளைத் தாமதம் இன்றி இலங்கைக்கு அனுப்பி வைக்கும்படியும் —

இலங்கைக் கடற்படையினருக்கு ''Frogmen'' பயிற்சியை இஸ்ரவேல் நிபுணர்கள் வழங்க வேண்டும் என்றும் இஸ்ரவேல் ஜனாதிபதியிடம் அச்சமயம்வேண்டுகோள் விடப்பட்டது.-

அக்கோரிக்கையில் தெரிவிக்கப்பட்ட விடயங்களைத் துரிதப்படுத்த இஸ்ரவேல் தீர்மானித்துள்ளது. (உ-எ)

## பெண்கள் பேரணி நேற்று யாழ்நகரில்

யாழ்ப்பாணம், டிச.13

பெண்கள் மட்டுமே கலந்துகொண்ட பேரணி ஒன்று நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியே இந்தப் பேரணியை ஒழுங்கு செய்திருந்தது.

நேற்றுக்காலை 10மணி அளவில் பாஷையூர் அந்தோனியார் கோவிலில் இருந்து ஆரம்பமான இந்தப் பேரணி கடற்கரைவீதி, சுண்டுக்குளி, பஸ்தியாம்பிள்ளைச் சந்தி ஆஸ்பத்திரிவீதி, பஸ்நிலையப் பகுதி ஆகியவற்றினூடாகச் சென்று யாழ். பெருமாள்கோவிலடியை அடைந்தது.

பெரும் எண்ணிக்கையான பெண்கள் பேரணியில் கலந்து கொண்டனர்.

அராஜகச் செயல்களுக்கு எதிராக—

போராளிகளினதும், பொதுமக்களினதும் போராட்ட ஆதரவு சக்திகளினதும் எதிர்ப்புணர்வை வெளிப்படுத்தும் முகமாகவே நேற்றைய ஊர்வலம் நடத்தப்பட்டது.

பேரணியில் சுமந்து வந்த அராஜகவாதி ஒருவரின் கொடும்பாவியும் பேரணி முடிவில் எரிக்கப்பட்டது. இறுதியில் பெருமாள் கோவிலடியில் பொதுக்கூட்டம் ஒன்றும் நடைபெற்றது. (உ-10)

## விடுதலையானர்

மதுரை, டிச. 12

மதுரை தலைமைத் தபால்அலுவலகக் குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட அமெரிக்கநாட்டுப் பிரசை இன்று விடுவிக்கப்பட்டார்.

இதனிடையில் அழகப்பா ரயில் நிலையத்துக்கும் மதுரை தலைமைத் தபால் நிலையத்துக்கும் வைக்கப்பட்ட குண்டுகள் ஒரே ரகமானவை என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

## சுவீப் பணம் விழிப்புலனற்றோர் திட்டத்திற்கு

யாழ்ப்பாணம், டிச.13

தமிழ் ஈழம் போர் நிதிக்காக தமிழ்ஈழ இராணுவத்தினால் நடத்தப்பட்ட 2ஆவது சீட்டிழுப்பில் கிடைத்த பணத்தில் ரூபா 25 ஆயிரம் யாழ் விழிப்புலனற்றோர்சங்கத்திடம் கையளிக்கப்படும்.

நவீல்ட் பாடசாலையிலிருந்து படிப்பு முடிந்து வெளியேறி வேலையற்றிருக்கும் சுமார் 150 விழிப்புலனற்றோரின் வேலைத்திட்டத்திற்கு இந் நிதி உபயோகிக்கப்படும்.

இந்நிதி நவீல்ட் பாடசாலைக்குகொடுக்கப்படும் என முன்னர் தமிழ் ஈழ இராணுவம் அறிவித்திருந்தது தெரிந்ததே.

பொதுமக்களின் வேண்டுகோளின்படி இந் நிதி விழிப்புலனற்றோர் சங்கத்திடம் ஒப்படைக்கப்படுகிறது என தற்போது அறிவிக்கப்பட்டிருக்கிறது. (உ)

## சீனா சீறுகிறது!

பீகிங், டிச. 12

அருணசலப் பிரதேசத்தை ஒரு மாநிலமாக இந்திய நாடாளுமன்றம் அங்கீகரித்ததை சீனா எதிர்த்துள்ளது.

அருணாசலப் பிரதேசம் பிரச்சினைக்குரியது. அதை மாநிலமாக இந்தியா பிரகடனப்படுத்தியது, 1970 உடன்பாட்டை மீறிய செயலாகும் — இப்படி சீனா, இந்தியாமீது குற்றஞ் சாட்டியுள்ளது. (அ-எ)

## இந்தியா சாடுகிறது

புதுடில்லி, டிச. 12

அருணசலப் பிரதேசத்தை மாநிலமாகப் பிரகடனப்படுத்திய செயலை சீனா எதிர்ப்பதை இந்தியா கண்டித்துள்ளது.

இந்தியாவின் உள்விவகாரத்தில் சீனா தலையிடுகின்றது என்று இந்திய அரசு குற்றஞ் சாட்டியுள்ளது.

சீனாவின் ஆட்சேபனையை ஏற்றுக்கொள்ளமுடியாது என்று இந்திய வெளியுறவு அமைச்சுப் பேச்சாளர் சொன்னார். (அ-எ)

சென்னையிலிருந்து

## இணை அமைச்சர் குழு நேராக கொழும்பு வராது

புதுடில்லி, டிச.12

தமிழர் அமைப்புக்களிடம் கருத்தை அறிந்த பின்னர் இந்திய இணை அமைச்சர் குழு நேராக சென்னையில் இருந்து கொழும்பு வரமாட்டாது.

அவர்கள் மீண்டும் புதுடில்லி சென்று பிரதமர் ராஜீவ் காந்தியிடம் தமிழர் அமைப்புக்களின் கருத்துக்களைத் தெரிவிப் (8ஆம் பக்கம் பார்க்க)

நன்றி நவிலல்

எமது திருமணத்திலும்
வரவேற்பிலும்
அன்புடனும் ஆர்வத்துடனும்
நேரில் கலந்துகொண்டும்
ஆசிகள் அனுப்பியும்
வையத்துள் நாம் வளமாக வாழ
உளமார வாழ்த்திய
இனிய நெஞ்சங்களுக்கெல்லாம்
எமது இதயம் கனிந்த நன்றிகள்.

சரவணபவன்
யசோதை
தம்பதிகள்.

புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலைப் புலிகள் விதித்த

# நிபந்தனைகளை நிறைவேற்றாமலேயே சிப்பாய்களை சிறைமீட்க முயன்ற விஜே

## சினிமா நடிகரின் கூற்றுக்கு கிட்டுவின் பதில்

டெலிவிஷன் கமராக்கள் சுழல்கின்றன.

வெளிநாடு, கொழும்பு, யாழ் பத்திரிகையாளர்கள் சுறுசுறுப்பாக உள்ளனர்.

பௌத்த குருமார்கள் அமைதியுடன் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கின்றனர்.

கமராக்களுக்கு பழக்கப்பட்டது அவரின் முகம் படஷூட்டிங்கிலே ஒரு கட்டமோ என்ற பிரமையைத்தான் அவருக்கு ஏற்படுத்தி இருக்கவேண்டும்

அந்தப்பிரமையை மாற்றி அமைக்கும் வகையில் போராட்ட 'ஷூட்டிங்'கிலே ஈடுபட்டுள்ள இளைஞர்குழு ஆயுதங்களுடன் சூழ்ந்து நிற்கிறது.

விஜே பேசத் தொடங்குகின்றார்.

எங்கே என்று எண்ணுகிறீர்களா? வேறு எங்கேயும் இல்லை. நமது பழைய பூங்காவிலேதான் இப்புதிய சரித்திரம் இடம் பெறுகின்றது.

* *

சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டது. பழைய பூங்காவில் உள்ளபழைய செயலகம்.

அரச அதிபர்கள் பலர் செயல்பட்டு வந்த அந்த செயலகம், இன்று புலிகளின் முகாம்; பாசறை.

அடர்ந்த நெடிது உயர்ந்த மரங்கள் பச்சைப் பசேல் என்ற தோற்றம். எங்கோ காட்டுப் பிரதேசம் ஒன்றில் நிற்கிறோம் என்ற உணர்வை அங்கிருப்போருக்கு ஏற்படுத்துகிறது.

பயிற்சி பெறும் புலிகளின் கூடாரங்கள் மரங்களின் அடியில் அமைக்கப்பட்டுள்ளன.

கைகளிலே ஆயுதங்களுடன் புலிகள் பயிற்சி பெற்றுக் கொண்டிருக்கின்றார்கள்.

பழைய பூங்கா வாசலில் இருந்து பழைய செயலகம் வரை புதிய பரணி பாடும் இளைஞர்கள் ஆயுதபாணிகளாக அணிவகுத்து நிற்கின்றனர்.

புலிகளின் யாழ்மாவட்டத் தளபதி கிட்டு, நெருங்கிய சகாக்களுடன் வந்திறங்குகிறார்கள் — வரப் போகிறவர்களை வரவேற்க.

அதோ கொழும்பு பஸ்ஸின் சத்தம் கேட்கிறது.

சிப்பாய்கள் இரண்டு பேரையும் சிறைமீட்க இரண்டாவது தடவையாக யாழ் வரும் விஜே வந்திறங்குகின்றார்.

முதல் தடவை வந்ததற்கும் இதற்கும்நிறைய வித்தியாசம்.

ஆகாயமார்க்கமாக முன்னர் வந்தவர், இம்முறை தரைமார்க்கமாக தடைகள் பல தாண்டி வந்தார்.

பௌத்தமத குருமார்களுடன் புலிகளின் முதல் நேரடிச் சந்திப்பு இது.

மஞ்சள் அங்கிகளுடன் வந்திறங்கிய மதகுருமார்கள், அங்கிங்கினைதபடி எங்கும் ஆயுதங்களுடன் நின்ற புலிகளையே முதலில் கண்டனர்

பின்னர் பழைய செயலக மேல்மாடிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

மாநாட்டு அறை. மாவட்டத் தளபதி கிட்டு தலைமை வகித்துப் பேசினார். பின்னர் விஜே, பௌத்த குருமார்கள் பேசினர்.

விருந்தாளிகள் பேச்சு சிறை வைக்கப்பட்டுள்ள இரண்டு ஸ்ரீலங்கா சிப்பாய்களை விடுவிக்கும் பேச்சாகவே அமைந்தது.

விஜே சொல்கிறார் 'இலங்கையில் தமிழ்

> **விஜேயின் இரண்டாவது யாழ் விஜயம் பற்றிய ஒரு கண்ணோட்டமே இக்கட்டுரை-**

அரசாட்சியின் கீழ் சிங்களவர் ஒற்றுமையாக வாழ்ந்தனர்

'அதே போன்று சிங்களவர் அரசாட்சியில் தமிழர் ஒற்றுமையாக வாழ்ந்தனர்'.

'இன்று நடக்கும் ஆட்சியின் அமைச்சரவையில் சிங்களவரும் உள்ளனர். தமிழரும் உள்ளனர்.

ஆனால் நாட்டில் தமிழரும் நிம்மதியாக வாழ முடியாதுள்ளது. அதே போன்று சிங்களவரும் வாழ முடியாதுள்ளது'— இப்படிச் சொன்னார் அவர்

வடக்கையும் கிழக்கையும் இணைத்து தமிழர் தாயகமாகத் தரவேண்டும் என்பதே இன்று புலிகளின் 'உடும்புப் பிடியான' கோரிக்கை.

ஆனால் விஜே அதுபற்றி எல்லாம் பேசி அலட்டிக் கொள்ளவில்லை. தனது நேரத்தையும் வீணாக்க விரும்பவில்லை.

மாறாக, வடக்கிற்கும் தெற்குக்கும் இணைப்புப் பாலம் போட வேண்டும் என்றார் விஜே

அதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதையும் விஜே சொல்லத் தவறவில்லை-

இணைப்புப் பாலம் நிறுவ தென் இலங்கைப் பகுதியில் அத்திவாரக் கல் ஒன்று தேவைப்படுகின்றது

அதுதான் புலிகளினால் சிறைவைக்கப்பட்டுள்ள இரண்டு ஸ்ரீலங்கா சிப்பாய்களின் விடுதலை

—இப்படிக் கூறினார் விஜே.

சிப்பாய்களை விடுவிக்க விடுதலைப் புலிகள் விதித்த நிபந்தனைகளைப் பற்றி எதுவும் பேசாமல்— அந்த நிபந்தனைகளை நிறைவேற்றாமலேயே— சிப்பாய்களை விடுவிக்கப் பகீரதப் பிரயத்தனம் செய்தார் விஜே

ஆனால் அவர் முயற்சி பலனளிக்கவில்லை.

தீவிரவாதிகளும் மனிதாபிமானம் மிக்கவர்கள் என்பதைக் காட்ட சிப்பாய்களை விடுதலை செய்யுங்கள் என்ற கோரிக்கைக்கு தளபதி கிட்டுவின் தன்மையுரை பதிலாக அமைந்து விட்டது.

"நாம் மனிதாபிமானம் உள்ளவர்கள். மன்னார், யாழ் பொலீஸ் நிலையத் தாக்குதல்களில் கைதான மூன்று பொலிஸாரை விடுவித்து விட்டோம்.

"அடம்பன் மோதலின் போது எம்மால் கொல்லப்பட்ட 9 சிப்பாய்களின் சடலங்களையும் கோட்டை இராணுவ முகாமில் நேரடியாக ஒப்படைத்தோம்.

'சிறைபிடிக்கப்பட்ட இரண்டு சிப்பாய்களையும் இன்னும் உயிருடன் வைத்திருக்கிறோம் இனியும் உயிருடன் வைத்திருப்போம்

"தங்கள் சிப்பாய்கள் குறித்து இலங்கை அரசு மனிதாபிமானமாக நடக்கின்றதா என்பதைக் காட்டவேதான் இரண்டு சிப்பாய்களையும் பிடித்து வைத்துள்ளோம்"— இப்படி தளபதி கிட்டு வலியுறுத்திச் சொன்னார்

சுமார் 300 மைல் தாண்டி, மதகுருமார் உட்பட நூறு பேர்களுடன் யாழ் வந்தது வடக்கு - தெற்கு இணைப்பை வைத்து சிப்பாய்களை

**தீபன்ராஜா**

விடுவிக்கவே என்பது இச்கூட்டத்தில் பௌத்த மதகுருமார்கள் நிகழ்த்திய பேச்சுக்களில் இருந்து தெரியவந்தது.

இனப்பிரச்சினைத் தீர்வு சிக்கலாகியுள்ள நேரத்தில்—

"நாம் விரும்புவதும் இந்த அடிப்படையிலான தீர்வுதான் என்று வெட்டு ஒன்று துண்டு இரண்டாகச் சொல்லக்கூடிய சிங்கள அரசியல்வாதிகள்"— இன்னும் உருவாகவில்லை என்பதை விஜேயின் இரண்டாவது யாழ் விஜயமும் துலாம்பரமாகக் காட்டிவிட்டது.

நாட்டில் இன்று இடம் பெறுவது முதலாளித்துவ அரசியல் பிரச்சினை; இனப்பிரச்சினை அல்ல; ஆகவே தமிழரும் சிங்களவரும் இணைந்து முதலில் இந்த முதலாளித்துவ அமைப்பு முறையை மாற்ற வேண்டும் என்ற விஜேயின் கூற்றுக்கு தளபதி கிட்டு, வெளிநாட்டுச் செய்தியாளர் மத்தியில் உறைப்பாகப் பதில் கூறியதையும் அவதானிக்க முடிந்தது

"நாமும் சோஷலிச அமைப்பையே விரும்புகின்றோம். இப்போது சோஷலிசத்தை முன்னுக்கு வைத்து மக்களை கஷ்டப்படுத்த விரும்பவில்லை. முதலில் இழந்த எமது தாயகத்தைத் திரும்பப் பெறவேண்டும். அதற்காகவே இன்று போராடுகின்றோம். அதில் வெற்றிகண்ட பின்னர் சோஷலிச ஆட்சியை எமது தாயகத்தில் நிறுவுவோம்"— என்பது தளபதி கிட்டுவின் கருத்து.

சிப்பாய்களை விடுதலை செய்வது எம் கையில் அல்ல; உங்கள் கைகளில் தான் உண்டு நீங்கள் அரசை வற்புறுத்தி எம் நிபந்தனையை ஏற்கச் செய்யுங்கள்"— இப்படி தளபதி கிட்டு, சிப்பாய்களின் உறவினர்களிடம் நேரடியாகக் கூறிவிட்டார் — 'Ball is in your court'— என்று

'பந்து'டன் திரும்பியுள்ள விஜேயின் சிறை மீட்கும் படலத்தின் இரண்டாம் அங்கம் கடந்த சனிக்கிழமை முடிந்தது.

மூன்றும் அங்கம் எப்போது? ரொபின்ஸன் புரூஸ் போன்று விஜேயும் விடமாட்டார் என்பதை மட்டும் நம்பலாம்.

---

# அரசாங்க அலுவலகங்களில்....

"சிகதி"

## விறகுத் தட்டுப்பாடும் ஒப்பந்தக்காரர்களும்

சுகாதாரம் இருந்தால்தான் எவரும் எதையும் சாதிக்க முடியும் இதனால் சுத்தம் சுகம் தரும்' என்பதை நாம் அறிந்துகொண்டோம். சுகாதார திணைக்களத்தின் நிர்வாகத்தில் உள்ள வைத்தியசாலைகளில் பல குறைபாடுகள் காணப்படுகின்றன. அரசாங்கம் 1956ம் ஆண்டில் இருந்து டாக்டர்கள் தனியார் சேவையை ரத்துச் செய்திருந்தது ஆனால் தற்பொழுது மீண்டும் இச்சேவை நடைபெறுகிறது. கொழும்பு பொது வைத்தியசாலையில் இரு இருதய நிபுணர்களுக்கிடையில் ஏற்பட்ட பிரச்சினையின் காரணமாக நோயாளிகள் பல கஷ்டங்களை எதிர்கொள்ள வேண்டியிருப்பதாகவும், அரசாங்க வைத்தியர்கள் சங்கம் தெரிவித்த கருத்துக்களையும் அரசு ஏற்கவில்லை எனவும் தெரிகிறது இதனால் பாதிக்கப்படுவது நோயாளிகளே, பட்டம்பெற்ற அரச டாக்டர்கள் அனைவரும் மக்கள் பணத்தில் தான் தமது வைத்திய கல்வியைக் கற்றனர் என்பதைச் சிலர் மறந்துவிடுகின்றனர்.

* * *

ஆசிரியர்கள் லீவுகளை எப்படிப் பெறவேண்டும் என்ற விளக்கம் யாழ் கல்வித் திணைக்கள அதிகாரியினால் வெளியிடப்பட்டுள்ளது. நிர்வாக ரீதியாக பல விடயங்களையும் உள்ளடக்கிய விவரங்கள் காலத்திற்குக் காலம் இதுபோன்ற முறையில் தெரிவிப்பது ஆசிரியர்களும் தங்கள் பொறுப்புகளைத் தெரிந்துகொள்ளவும் அதிபர்களின் சிரமங்களைக் குறைக்கவும் உதவுவதாக அமையும். அத்துடன் ஆசிரியர்களும் குறித்த நேரத்திற்குப் பாடசாலைக்குச் செல்லுவதும் அத்தியாவசியமாகின்றது.

* * *

நிதி பற்றாக்குறையால் பல திணைக்கள அபிவிருத்தி வேலைகள் அதிகளவில் பாதிக்கப்படலாம் என்ற சந்தேகமும் பலருக்குண்டு இதனைத் தவிர்க்கும் முகமாக பல்வேறு திணைக்களங்களைச் சார்ந்த அதிகாரிகள் கண்ணும் கருத்துமாக இருத்தல் வேண்டும். உத்தரவு வந்த பின்னர் செயற்படுவதில் எதுவித பிரயோசனமும் இராது. பல கஷ்டங்கள் மத்தியிலும் இங்கே அபிவிருத்தியில் ஈடுபட்ட அதிகாரிகள் அனைவரும் பாராட்டப்பட வேண்டியவர்களே.

* * *

யாழ் தொலைத்தொடர்பு நிலைய பணியாளர்களுக்கு பல சிரமங்களும் கஷ்டங்களும் அண்மைக் காலங்களில் ஏற்பட்டுள்ளன. அவர்களுக்கு அடிக்கடி ஏற்படும் துன்புறுத்தல்களின் காரணமாக பல இடங்களுக்கு இடம்பெயர வேண்டி உள்ளது இப்போதைய சூழ்நிலையால் மிகவும் பாதிக்கப்படக் கூடிய திணைக்களங்கள் இதற்கு ஓர் தீர்வைக் காண வேண்டும்.

* * *

உப தபால் அதிபர்கள் குறைபாடு பற்றிப் பேசப்படுகிறது ஆனால் அவர்கள் நிலையை சீராக்க அத்திணைக்களம் பின் நிற்கிறது. போலத் தெரிகிறது. தொடர்ந்தும் அவர்களுக்கு கமிஷனும் விசேட அலவன்ஸும் வழங்கப்படுகின்றன. ஆனால் சேவைக்கேற்ற முறையில் சம்பளம் வழங்கப்படவில்லை என்பதுதான் அவர்களது நிலை —தேர்தல் காலங்களில் இவர்களை முழுமையாக பயன்படுத்தும் அரசியல்வாதிகள் தேர்தல் முடிந்ததும் இவர்களை நினைப்பதில்லை.

* * *

அரசாங்க மரக்கூட்டுத்தாபனத்தினரால் கிளைகளுக்கு விநியோகிக்கப்படும் விறகிற்குக் குடாநாட்டில் பெரும் அளவில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. ஒப்பந்தக்காரர்களினால் மரக்கூட்டுத் தாபனத்திற்கு வழங்கப்படும் முறையில் மாற்றம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து அவர்கள் விறகு விநியோகத்தை நிறுத்தியுள்ளனர். இதனால் பொது மக்கள் பெரிதும் பாதிப்பிற்குள்ளாகியுள்ளனர். முன்னர் ஒப்பந்தக்காரர்கள் ஒரு 'லோட்' விறகை கூட்டுத்தாபனத்திற்கு வழங்கினால் அவர்கள் ஒரு 'லோட்' விறகை தாங்கள் பெற்றுக்கொள்ள முடியும். இந்த நியதி மாற்றப்பட்டதனால் விறகு விநியோகம் இடைநிறுத்தப்பட்டுள்ளது. கூட்டுத்தாபனத்திற்கு வழங்கும் ஒரு 'லோட்' விறகிற்கு 2,250/- ரூபா ஒப்பந்தக்காரர் பெறுகின்றனர். தமக்குரிய ஒரு 'லோட்' விறகை வெளிச் சந்தையில் அவர் 4,500/- ரூபாவிற்கு விற்கலாம். ஆனால் அதற்கு 660/- ரூபா கூட்டுத் தாபனத்திற்கு செலுத்த வேண்டும். இனி ஒப்பந்தகாரரை திருப்தி அடைய செய்தால்தான் விறகு இங்கே கிடைக்குமோ?

* *

---

# தமிழகத்தில் இந்தி எதிர்ப்பு போராட்டம்

# எம். ஜி. ஆருக்கு பெரும் தலையிடி

## உலக உலா

என்.பி.சீலன்

இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடத்திய தி. மு. க. தலைவர் மு. கருணாநிதியும் ஆயிரக்கணக்கான தொண்டர்களும் தமிழ்நாட்டில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தியை ஆட்சி மொழியாக அங்கீகரிக்கும் இந்திய அரசமைப்பின் 17 ஆவது சரத்தின் பிரதிகளை எரித்தனர் என்று அவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது.

கருணாநிதி மீதும் அவரது தொண்டர்கள் மீதும் 14 நாள் தடுப்புக் காவல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

இச்சம்பவத்தை அடுத்து தமிழ் நாட்டில் பரவலாக வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. அரசுக்குச் சொந்தமான பஸ்கள் எரிக்கப்பட்டிருக்கின்றன அரச கட்டடங்கள் சேதமாக்கப்பட்டிருக்கின்றன.

வன்செயல்களில் ஈடுபடுவோரை கண்ட இடத்தில் சுடும்படி மாநிலப் பொலீஸாருக்கு உத்தரவிடப்பட்டிருப்பது தமிழ் நாட்டு நிலைமை மோசம் அடைந்திருப்பதையே எடுத்துக் காட்டுகிறது.

1937, 1965 ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டங்களின் தொடர் போராட்டமாக அரசியல் அவதானிகள் தற்போதைய போராட்டத்தைக் கருதுகின்றனர்.

ஆட்சியில் உள்ள அண்ணா தி.மு.க அரசாங்கமே இந்தித் திணிப்புத் தொடர்பாக சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறது. தமிழ் நாட்டில் இந்தி எதிர்ப்பு உணர்வு எவ்வளவு தூரம் தீவிரம் அடைந்திருக்கிறது என்பது அதன் மூலம் புலனாகிறது.

**முக்கிய பிரச்சினை**

தமிழ் நாட்டு அரசியலைப் பொறுத்தமட்டில் கடந்த 50 ஆண்டுகளாக மொழிப் பிரச்சினை மக்களின் உணர்ச்சியைத் தூண்டும் ஒரு முக்கிய பிரச்சினையாக இருந்து வருவதை அவதானிக்கலாம்.

தமிழ் நாட்டில் இது பல்வேறு சந்தர்ப்பங்களில் அரசியல் நெருக்கடியை ஏற்படுத்தி இருக்கிறது என்பதையும் மறந்து விடலாகாது.

தமிழ் நாட்டில் ஜவஹர்லால் நேருவின் காங்கிரஸ் கட்சிக்கு ஒரு மாற்றுக் கட்சியைத் தோற்றுவித்ததே இந்த மொழிப் பிரச்சினைதான்.

**மூன்று கட்டங்களில்**

தமிழ் நாட்டு அரசியலைப் பொறுத்தவரை இந்தி எதிர்ப்புப் போராட்டம் மூன்று கட்டங்களில் அடங்குகிறது.

முதலாவது போராட்டம் 1937 ஆம் ஆண்டு. இந்தியா, பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இருந்த சமயம் இடம்பெற்றது

அப்போதிருந்த சென்னை ஆட்சிப் பகுதிக்கு(Madras Presidency) தலைவராக இருந்தவர் காங்கிரஸைச் சேர்ந்த ராஜகோபாலாச்சாரியார் தமிழ் நாட்டில் உள்ள பாடசாலைகளில் இந்தியை கட்டாய பாடமாக்கும் திட்டம் ஒன்றை அப்போது அவர் அறிமுகப் படுத்தினார்.

இதற்கு எதிராக அப்போது நடத்தப்பட்ட போராட்டமே தமிழ் நாட்டில் பிராந்திய அரசியல் சக்திகளின் எழுச்சிக்கு வழி வகுத்தது அத்தோடு 'நாம் திராவிடர்' என்ற உணர்வை ஏற்படுத்தியது. பாடசாலைகள்,) அரசாங்கக் கட்டடங்கள் முன் பெரும் அளவில் மறியல் நடத்தப்பட்டது.

ராஜகோபாலாச்சாரியார் எதிர்ப்புகளுக்குப் பணிந்து அப்போதைய எதிர்ப்புச்சக்திகளுடன் பின்பு ஒருவித இணக்கத்தை ஏற்படுத்திக் கொண்டார்.

**நீதிக் கட்சி**

பெரியார் ஈ. வி. ராமசுவாமி நாயக்கர், அறிஞர் சி. என். அண்ணாத்துரை, குமாரி ராஜா முத்தையாச் செட்டியார், ஏ. ரி. பன்னீர்ச் செல்வம் ஆகியோரின் நீதிக்கட்சி தமிழ் நாட்டில் முதல் தடவையாக இந்தி எதிர்ப்பு உணர்வை ஊட்டியது.

தமிழ் நாட்டில் இரண்டாவது இந்தி எதிர்ப்புப் போராட்டம் காங்கிரஸ் முதலமைச்சராக இருந்த பக்தவத்சலம் காலத்தில் நடைபெற்றது

1960க்கும் 1965க்கும் இடையில் பல்வேறு கால கட்டங்களில் நடைபெற்ற இப்போராட்டமே பிராந்திய அரசியல் கட்சியான தி. மு. க. சக்தி வாய்ந்த அரசியல் கட்சியாக உருவெடுக்க வழிவகுத்தது.

'இந்திபேசாத மாநிலங்கள் விரும்பும்வரை ஆங்கிலம் தொடர்ந்து தொடர்பு மொழியாக இருக்கும் என்ற உறுதிமொழி கொடுக்கப்பட்டதை அடுத்து இப்போராட்டம் தணிந்தது

இப்போராட்டங்கள் மூலம் படிப்படியாக வளர்ந்த தி. மு. க. 1967ஆம் ஆண்டு தமிழ் நாட்டில் ஆட்சியைக் கைப்பற்றியது

தமிழ் நாட்டில் தற்போது நடப்பதை மூன்றாவது கட்ட போராட்டம் எனலாம்

கடந்த சில காலங்களாக ஈழத்தமிழர் விவகாரத்தில் போராட்டங்களை நடத்திவந்த கலைஞர் மு கருணாநிதி தற்போது இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் முழுமூச்சாக இறங்கிஇருக்கிறார்.

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் ஆரம்பமே "இந்தி வாரம்" தான்.

கடந்த செப்டம்பர் 12ஆம் திகதி தொடக்கம் 19ஆம் திகதிவரையிலான ஒருவார காலம் இந்தியா முழுவதும் இந்திவாரமாக அனுஷ்டிக்கப்பட்டது.

இந்தி வாரத்தில் அரசாங்க அதிகாரிகள் இந்தியில் கையெழுத்திடவேண்டும் என்று மத்திய அரசு ஆலோசனை கூறியது. அத்துடன் மாநிலங்களில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் மாதிரிப் பாடசாலைகளை நிறுவி அதில் இந்தியை கற்பிக்கும் யோசனையையும் மத்திய அரசு வெளியிட்டது.

இந்தி வாரத்தில் இருந்து ஆரம்பமான போராட்டமே தற்போது கருணாநிதி கைதாகும் அளவுக்கு சூடுபிடித்திருக்கிறது

நவம்பர் 17ஆம் திகதி தொடக்கம் மூன்றுவார காலப்போராட்டம் நடத்தப் போவதாக அறிவித்து தி. மு. க தொண்டர்கள் பகுதி, பகுதியாகப் போராட்டத்தில் குதித்து வருகின்றனர்.

முதல் நாள் போராட்டம் அன்றே அன்பழகன் உட்பட ஏழு தி. மு. க. சட்டசபை உறுப்பினர்கள் பதவி இழந்தனர். அரசமைப்புச் சட்டப் பிரதிகளை எரித்ததாக இவர்கள் மீது குற்றஞ் சாட்டப்பட்டிருக்கிறது.

ஆகவே தி.மு க. சட்ட

(8 ஆம் பக்கம் பார்க்க)

---

## ஓர் ஆண்டு நினைவு அஞ்சலி
(13-12 1986 சனிக்கிழமை)



நட்புக்கொரு நல்ல ஜெயா
நல்ல உள்ளம் கொண்ட ஜெயா
அன்பு எர்மை வாட்டுதம்மா
பாரில் உன்னைக் காண்பதெப்போ?

**செல்வி பரமு ஜெயராணி**

மண்ணுலகம்: 17 - 05 - 1965
விண்ணுலகம்: 24 - 11 - 1985

நாவலர் சனசமூக நிலையம்,
நாவலடி, உடுப்பிட்டி

பரமு தவமணி
குடும்பத்தினர்.

---

## நாணயமாற்று விகிதம்

வாசகர்களின் நன்மை கருதி வெளிநாட்டு நாணயங்களுக்கு உரிய இலங்கை நாணய மதிப்பு விவரம் வாராந்தம் சஞ்சீவியில் பிரசுரமாகிறது (இது இலங்கை வங்கியின் 12 ஆம் திகதிய மாற்று விகிதமாகும்.)

| வெளிநாட்டு நாணயம் | இலங்கையில் (ரூபா சதத்தில்) |
|---|---|
| ஸ்ரேலிங் பவுண் | 40. 17 |
| அமெ. டாலர் | 28. 38 |
| இந்திய ரூபா | 2. 14 |
| மார்க் ஜேர்மனி | 14. 04 |
| கனடா டாலர் | 20. 28 |
| பிராங் (பிரெஞ்சு) | 4. 28 |
| பிராங் (சுவிஸ்) | 16. 60 |
| அவுஸ். டாலர் | 18. 40 |

---


கணித, விஞ்ஞான உதவி ஆசிரியர் தெரிவுக்குரிய
போட்டிப் பரீட்சைக்கான
**துரித பயிற்சி வகுப்புகள்**

பாடநெறி:
பொது உளச்சார்பும், பொது அறிவும்

ஆரம்பம்: 15-12-1986

- இலவச அச்சடித்த பாடக் குறிப்புகள்
- வினா விடைப் பயிற்சிகள்.

கட்டணம்: ரூபா 125-00
(முழுப் பயிற்சிக்கும்)

தபால் மூலம் பாடநெறிகளைப் பெற விரும்புவோர் பதிவாளர் அஸ்ரன் இன்ஸ்ரிரியூட் என்ற விலாசத்திற்கு ரூபா 60/- காசுக் கட்டளையை அனுப்பி பதிவுத் தபாலில் பெற்றுக்கொள்ளலாம்.

**ASTAN INSTITUTE**
166/1, Hospital Road, JAFFNA.
கிளை: STANLEY ROAD, JAFFNA.
(மக்கள் வங்கிக்கு அருகாமையில்)



**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# திருவருட் திறன் பேசும் திருவெம்பாவைப் பாடல்கள்

மார்கழி மாதம் தேவர்களுக்கு வைகறைப்போதாகும். எனவேதான் மார்கழி மாதத்தில் வரும் வழிபாடும் வைகறைப்போது வழிபாடாக விளங்குகின்றது.

காலை நீராடலும், காலை வழிபாடும் சிந்தனையும், மனதிற்கும் உடலுக்கும் நன்மையளிப்பதாகும். இந்த வகையிலே இறைவன் அருளைப் பற்றிச் சிந்திக்க திருவெம்பாவைப் பாடல்கள் பெரிதும் உதவுகின்றன.

ஆணவமலம் போன்ற இரவு மிகக் கொடிய மிருகங்கள் சில தவிர ஏனைய பிராணிகளோ, மானிடரோ இருட்டை விரும்புவதில்லை. ஆகவே தான் காலை நேரத்தை குயில் முதலான பறவைகள் ஆனந்த ஒலி செய்து வரவேற்கின்றன.

இருட்டிலிருந்து ஒளிக்கு மாறும் நேரத்தில் தான் இறைவனின் திருவருட் சக்தி நன்கு புலப்படுகிறது.

ஆதியும் அந்தமும் "தாமே தலைவர்" என ஆணவ இருட்டின் மறைப்பினால் பேசி நின்ற பிரமதேவருக்கும் விட்டுணு மூர்த்திக்கும் நடுவில் ஆதியும் அந்தமும் இல்லாத ஒளிப்பிழம்பாகத் தோன்றி அவர்களுக்கு நல்லறிவைக் கொடுத்தருள் செய்தார் இறைவன். அந்த அருட்திறத்தையே முன் வைத்து, "ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருஞ் சோதியை யாம் பாட" என ஆரம்பிக்கிறது திருவெம்பாவைப் பாடல்.

உலகத்திற்குத் தேவையானது மழை உலகத்தில் மழையின்றி உயிர்கள் நிலைநிற்க மாட்டாது உலகம் பாலைவனமாகவே மாறிவிடும். கடல் நீரை தன்னுள் இழுத்து முகில்கள் கருநிறம் கொள்கின்றன. இந்த முகில்கள் மின்னுகின்றன. இடிக்கின்றன. வானத்தில் மழை வில்லை காட்டுகின்றது. பின் மழைநீரைப் பொழிகின்றன.

இக்காட்சியைப் பார்க்கும் மணிவாசகருக்கு இறைவனுடன் பின்னமிலா அருட்சக்தியே இக்காட்சியில் தோற்றுகிறது. முகில் திருவருட் சக்தியாகிய உமையம்மையார் போல் தோற்றுகிறது. மின்னல் அம்மையின் இடைபோலவும், இடியோசை அம்பிகையின் திருவடியின் சிலம்போசையாகவும், மழை வில்லு அவர் புருவமாகவும் தோற்றுகின்றன.

இறைவனின் அடியார்களுக்கு திருவருட்சக்தியே முதலில் அருளைக் கொடுக்கின்றது என்பது சித்தாந்த சைவத்தின் கொள்கை. எனவே பூவுலகில் பெய்யும்மழை திருவருட் சக்தி இறைவன் அடியார்க்கு முதல் தரும் இனிய அருளாக விளங்குகின்றது.

இக்கருத்தைப் பின்வரும் திருவெம்பாவைப் பாடலில் தருகிறார் மணிவாசகர்

பௌராணிக வித்தகர்
வ. குகசர்மா

முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள்
இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேல்
பொன்னம் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எம்கோமான் அன்பர்க்கு
முன்னி யவள் நமக்கு முன்சுரக்கு மின்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய்.

இந்த அருட் சக்தியையே "பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை" எனப் பாடுவதும் இங்கு நோக்கத்தக்கது.

மழை பெய்த காரணத்தால் தடாகம் நீர் நிரம்புகிறது கருங்குவளை, தாமரை போன்ற நீர்வாழ் மலர்ச்செடிகள் மலரைத் தந்து நிற்கின்றன பறவைகள் ஒலி செய்கின்றன காலை நேரத்தில் நீராட வந்தவர்களும் இறைவனையும் அருட்சக்தியாகிய இறைவியையும் கண்டு மகிழ்ந்தார்கள் தடாகமே அவர்களுக்கு அவ்வாறு காட்சியளித்தது எனத் திருவெம்பாவைப் பாடலில் எடுத்துக் காட்டுகிறார். தடாகத்தில் உள்ள பைங்குவளைக் கார் மலர் உமையம்மையாரையும், செந்தாமரை மலர் செம்மேனியெம்

சமயம்

(7-ம் பக்கம் பார்க்க)

# இயற்கை எழில் நலத்தையும் இறைவன் அருள் நயத்தையும்

## ஆற்றுப்படுத்தும் தமிழ் இலக்கியங்கள்

சிறப்புக் கட்டுரை

இலக்கியம் என்பது மக்களுடைய பலவிதமான குறிக்கோளாகிய இலக்கினைக் கருத்திற் கொண்டு அறிஞர்களால் இயற்றப்படுவது. அதனால்தான் இலக்கியம் என்று பெயர் வந்தது. ஓர் இலக்கினையுடையது இலக்கியமாகும். இலக்கியம் உரைநடையாகவும், செய்யுள் நடையாகவும் இயற்றப்பட்டிருக்கின்றன. இதிலே செய்யுள் நடையாக இயற்றப்படும் இலக்கியமே சிறப்புடையதாகும் என்று கருதப்படுகின்றது.

இலக்கியங்கள் நாடக வழக்கென்றும் உலகியல் வழக்கென்றும் இரண்டு விதமாக இயங்குகின்றன. பொருட்பொலிவே இலக்கியங்களுக்கு இன்றியமையாததாக வேண்டப்படுவதாகும். உருவகம், உவமை, எளிமை, சரளம், பொருளாழம் கொண்டு உணர்பவற்கு இனிய சுவையை தருவது இனிய செய்யுளாகும் அகப்பொருள் பற்றியும் புறப்பொருள் பற்றியும் தோன்றிய இலக்கியங்கள் கடவுள் மேல் பாடிய பழைய காலத்து தெய்வ இலக்கியங்கள் –

### இலக்கியத்தின் தன்மை

ஆத்மாக்களை மகாத்மாக்களாக்குவது இலக்கியம் நமது சமய இலக்கியங்கள் எல்லாவற்றிலும் கடவுள் நெறி, அறவுணர்வு, ஒழுக்கம் போன்ற நல் இயல்புகள் எல்லாம் உயிர் நிலையாக அமைந்துள்ளன. அறத்தை மறந்து வழி தவறும்போது நல்ல நினைவையும் அறிவையும் ஊட்டி நேர்மை என்ற பாதையில் அழைத்துச் செல்ல வழிகாட்டும் இலக்கியங்கள் சமுதாயத்திற்கு அடிப்படையான வாழ்க்கை வகைகளை வகுத்து சொல்வதால் அவை காலம் இடம் கடந்தும் இன்றும் புதுப் பொலிவுடன் வாழ்கின்றன

இவற்றிலே புராணங்கள் இறைவனுடைய பெருமையையும், பக்தர்களின் மேன்மையையும்,

### இலக்கியம்

அறநெறி செல்வோர் நலம் அடைவதையும், மறநெறி செல்வோர் அழிவதையும் அழகாகக் கதைகள் மூலம் கூறுவன.

உலக வரலாற்றையே மாற்றி அமைப்பதில் எல்லா கலைகளையும் விட இலக்கியம் ஆற்றல் மிகுந்தது. தர்மம் குன்றி அதர்மம் மேலோங்கி இறைவன் அவதரிப்பான். இல்லையேல் இயற்கை சீறி எழும் என்று காட்டியிருக்கிறது நம் சமய இலக்கியம்.

அகத்திணையில் களவு, கற்பு என இருபகுதிகள் உண்டு. தொல்காப்பியத்தில் மண ஒழுக்கம் கற்பு, களவு என இரண்டாகப் பகுக்கப்பட்டிருக்கின்றது

திருக்குறளிலும் காமத்துப்பாலை களவியல் கற்பியல் என இரு கூறுகளாகக் கூறியதாகப் பரிமேலழகர் சொல்கிறார். பெற்றோரும் மற்றோரும் அறியாமலே ஓர் இளைஞனும் கன்னிப்பெண் ஒருத்தியும் இணைந்து மகிழ்தல் அறநெறி என்று நம்முடைய இலக்கியம் சொல்கிறது. இது வியப்பாக இருக்கலாம்.

இருவரும் கணவனும் மனைவியுமாக வேண்டும் என்ற தலைவிதி இருந்ததால் தான் காதல் பிறந்ததென்றும் காதலுக்குக் காரணம் ஊழ்வினை என்றும் தொல்காப்பியரே சொல்லியிருக்கிறார்.

நல்வினை கண்ணே நிகழ்ந்த ஊழ்வினையால் தலைவனும் தலைவியும் எதிர்ப்படுவார்கள். தலைவனோ தலைவியோ ஒருவரை ஒருவரைவிட ஒருவர் உயர்ந்த நிலையில் இருந்தாலும் குற்றமில்லை என்கிறார். முற்றிய காதல் இல்லற வாழ்வுக்கு இட்டுச்செல்கிறது. இல்லறம் தன்னலமற்ற தூயவாழ்வு. தன்னலமாயிருந்தவர்கள் பின் பிறநலம் பேணுபவர்களாக சேவை, தானதர்மம், அன்பு செலுத்துதல் முதலிய நற்குணங்களில் ஈடுபடுகின்றனர் இதனால் காதல் போய் தியாகம் தோன்றிவிடுகிறது. எனவே ஒருவனும் ஒருத்தியும் கருத்தொருமித்து இல்வாழ்வில் ஈடுபடுவது நல்லறம் எனப்படுகிறது.

### காதல் ஓவியம்

களிதாசனின் சாகுந்தலம் உலகப்புகழ் வாய்ந்தது. இவ்வரிய இலக்கியம் ஓர் சுவையான காதல் ஓவியம். துஷ்யந்த மன்னன் கண்ணுவமகரிஷியின் வளர்ப்பு மகளான சகுந்தலை மீது காதல் கொள்கிறான் சகுந்தலை மீது கொண்ட ஆசையால் தீராத வேட்கைகொண்டு மெலிகிறான் துஷ்யந்த மன்னன். சகுந்தலையும் வன்காற்றில் வாடும் வனமல்லிகைக் கொடிபோல்

-பாலாம்பிகை நடராசா-

(7 ஆம் பக்கம் பார்க்க)

## கடல் கடந்த கடிதம்

### கல்வி ஒரு சுமையா?

தம்பி,

சற்காலக் கல்வி மாணவர்களுக்கு ஒரு சுமையாக உள்ளது என்ற கருத்து தற்போது வீசும் காற்றிலே கலந்து வருகின்றது என எழுதியிருந்தாய்!

சுமை என்பதன் கருத்தென்ன? பிறர் பொருளைத் தூக்கிச் சுமக்கும்போது சுமையாகின்றது. தனது பொருளை, தன்தேவைக்கென, தானே எடுத்துச் செல்லும்போது அது சுமை அல்ல. கற்கும் கல்வி, தனதானால், தனக்குப் பயனானால், அது சுமையாகாது!

தேர்வுகளுக்காகத் தேடிவைக்கும் - தேக்கி வைக்கும் - தனக்கு எப்போதாயினும் பயன் படாத - விஷயங்கள் சுமைதான்! மாணாக்கரது ஆற்றலுக்கும் மனப்பாங்குக்கும் மாறான கல்வித் திணிப்பு சுமைதான்!

சொந்த நாட்டின் வரலாறும், வளமும் அறியாது பிறநாட்டுச் சம்பவக் கோர்வைகளைக் கற்றுப் பெற்ற அறிவும் சுமை மாத்திரமல்ல; சிலருக்குச் சிலவேளை அது ஒரு நோயாகவே மாறிவிடும்!

ஆரம்பக் கல்வியைப் பொறுத்தமட்டில் இன்று நாட்டிலிருக்கும் திட்டம் பெருமளவில் ஏற்றுக்கொள்ள வேண்டியது. ஆனால் நடைமுறைப்படுத்தும்விதம் பாடசாலைக்குப் பாடசாலை- ஆசிரியர்களின் அறிவு, ஆர்வம், செயல்திறனைப் பொறுத்து வேறுபடுகின்றது.

அடிப்படைத் தத்துவங்களை விளங்கி, மாணாக்கரின் உடல் வளர்ச்சி, மனவளர்ச்சி, ஆற்றல் வளர்ச்சி ஆகியவற்றிற்கான பயிற்சிகளை - செயல் மூலம் உணரவைக்கும் ஒன்றிணைக்கப்பட்ட பாட அலகுகளை - முறையாகச் செயற்படுத்தினால், ஆரம்பக் கல்வி சுமையல்ல; எல்லா மாணாக்கரும் சிறந்த முறையில் சமுதாயத்தின் சவால்களைச் சந்திக்க வழிவகுக்கும்!

உயர்கல்வி - பொருத்தமான உயர்கல்வி - மறுபரிசிலனைக்கு உரியதுதான்! —அன்புடன் சிவா

# புதுமைக் கருத்து உள்ளவருக்கு நோபல் இலக்கிய விருது

வண்ணை. சே. சிவராசா

இவ்வாண்டு, இலக்கியத்திற்கான நோபல் பரிசை நைஜீரிய நாட்டின் இலக்கியகர்த்தா வோல் சொயிங்கா (Wole Soyinka) பெறுவதன் மூலம், பின்தங்கிய நாடுகளில் வாழும் இலக்கிய கர்த்தாக்களுக்கு பெருமகிழ்ச்சியையும், புத்துணர்ச்சியையும் பெற்றுக் கொடுத்திருக்கிறார் என்றால் மிகையாகாது.

52 வயதான வோல் சொயிங்கா நாவலாசிரியர் மட்டுமல்லாமல் கவிஞரும் நாடகாசிரியராகவும் பெயரையும் புகழையும் தென் ஆபிரிக்க நாடுகளில் சம்பாதித்தவர். இவரது புகழ் ஆபிரிக்க நாடுகளில் மட்டுமல்லாமல், பொதுநல நாடுகளிலும் பரவியது

சமகால நைஜீரிய இலக்கியத்தின் ஆச்சரியமான வளர்ச்சியை இவரது எழுத்தில் காண முடிவதாக நைஜீரிய அறிஞர் அபியோடன் ஐறீல் இவரைப்பற்றி புகழாரம் சூட்டியுள்ளார்.

வோல் சொயிங்கா நைஜீரிய நாட்டின் இபடான் (Ibadan) அரசகல்லூரியில் கல்வி கற்றபின் இபடான் பல்கலைக்கழகத்தில் தனது பட்டப்படிப்பையும் முடித்துக்கொண்டு இங்கிலாந்தின் லீட்ஸ் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டத்தினையும் பெற்றார்.

1960 ஆம் ஆண்டளவில் மீண்டும் தனது தாய் நாட்டிற்குத் திரும்பிய சொயிங்கா இலக்கியம், நாடகம் என்பவற்றின் விரிவுரையாளராக இபடான், லாகோஸ் பல்கலைக்கழகங்களில் கடமையாற்றிய பின் 1975 ஆம் ஆண்டளவில் ஒப்பீட்டு இலக்கியத்தில் பேராசிரியராகவும் நியமிக்கப்பட்டார்.

அதே காலகட்டத்தில்; இங்கிலாந்திலுள்ள கேம்பிரிட்ஜ், செபீல்ட், போன்ற பல்கலைக்கழகங்களிலும் அமெரிக்காவிலுள்ள யேல் பல்கலைக்கழகத்திலும் அதிதிப் போதனாசிரியராகவும் கடமையாற்றியுள்ளார்.

இலக்கிய கர்த்தாவான இவர் "1960ன் முகமூடிகள்", "தொடுவானம் நாடகக் குழு" போன்ற நாடகக் குழுக்களை உருவாக்கி தான் எழுதிய நாடகங்களை நடித்தும் நெறிப்படுத்தியும் வெற்றிகண்டார். 1967ல் நைஜீரிய நாட்டில் ஏற்பட்ட உள்நாட்டுப் போரின்போது; சமாதானக்குரல் எழுப்பியதன் காரணமாக; இரு வருடங்கள் அரசியல் கைதியாக்கப்பட்டவர் சொயிங்கா.

இலக்கியவாதிகள் கலைஞர்கள் பற்றி அவர் கூறும்போது "அவர்கள் மக்களோடு எவ்வழியிலும் உறவாட முடியும்" என்றார். எனவே; இவரது இலக்கிய ஆக்கங்களும்; நாடகங்களும் சமூக, அரசியல் பிரச்சினைகளை கருப்பொருள்களாகக் கொண்டு பிரதிபலித்ததில் வியப்பில்லை எனலாம்.

"நீதியின் புரட்சி வடிவங்கள்" என்ற இவரது நாடகம் 'நைஜீரிய நாட்டு; சமூக பொருளாதார அரசியல் பிரச்சினைகளை மக்களுக்கு எடுத்துரைத்ததினால்;பல மக்களாலும் பாராட்டம் பெற்றது

இலக்கியமானது அறிவாற்றலின் வெளிப்பாடே; எனவே அது ஓர் இலக்கை மட்டும் கொண்டிருக்க வேண்டியதில்லை என்பது இவரது புதுமையான கருத்து. அதனால் மேற்கு நாடுகளின் அரசியல் கலை தத்துவங்களால் கவரப்பட்டு, தனது மக்களின் அத்தியாவசியமான அவசர இலக்கியத் தேவைகளை மறந்தவர் என்ற குற்றச்சாட்டுக்கும் ஆளானவர் இவரது எழுத்தோவியங்கள். மேற்கு நாடுகளின் சமூக கலாசாரப் பின்னணிகளை நைஜீரிய நாட்டோடு ஒப்பிடுவதன் மூலம், தனது தாய் நாட்டின் பின்னடைவுகளை சுட்டிக் காட்டவும் தவற

(7 ஆம் பக்கம் பார்க்க)

## ஞான சஞ்சீவி

# தெய்வ உணர்வு நிலை

பிரபஞ்சமெங்கும் மறை நுட்பமாகத் தென்படும் தெய்வசக்தியை தெய்வமனம் என்றும் தெய்வ உணர்வு நிலை என்றும், பிரபஞ்ச உணர்வு நிலையென்றும் அறிஞர்கள் கூறுவர்.

பரம்பொருளின் உணர்வு நிலையானது. மறைநுட்பமாக கனிப்பொருள்களிலும், தாவரங்களிலும், விலங்கினங்களிலும் மனித வாஜீத்மாக்களிலும், தனித்தனி உணர்வு நிலைகளாக வியாபித்திருந்து பரிணாம வளர்ச்சி பெற்று, ஈற்றில் பரமாத்மாவின்

- அ. குமரகுரு -

உணர்வு நிலையுடன் ஒன்றிக் கலந்து விடுவதுதான் பிரபஞ்சத்தின் நியதி.

தெய்வ உணர்வு நிலையை கனிப்பொருள் உருவாகுவதிலிருந்து படிப்படியாக எல்லாவித பரிணாம வளர்ச்சிகளிலும் அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது

தாவரப் பிரிவைநோக்கும்பொழுது உணர்வு நிலை இன்னும் வெளிப்படையாகத் தோன்றுகிறது ஒரே இடத்தில் பின்னிப்பிணைந்து நிற்கும் பலவிதமான மரங்கள், செடிகள்,கொடிகள் யாவும் தமது வளர்ச்சிக்கு வேண்டியவற்றை மட்டும் நிலத்திலிருந்து தனித்தனியாகக் கிரஹித்துப் பெற்றுக்கொள்கின்றன.

ஒவ்வொரு தாவரத்துக்கும் தனித்தனி உணர்வு நிலையில்லையெனில் அது தனது இனத்தின் நியதிக்கேற்ப, பூத்து, காய்த்து, கனிதரும் நிலை இருக்காது. குறிப்பிட்ட காலத்துக்கும் சூழலுக்கும் காத்திருந்து சில தாவரங்கள் பூக்கின்றன. மாமரத்தில் பலாப்பழமும், பலாமரத்தில் மாம்பழமும் தப்பித்தவறியேனும் உண்டாவதில்லை

விலங்கினப் பிரிவை எடுத்துக் கொண்டால் உணர்வு நிலையானது அந்தந்த இனங்களின் குணம்சங்களுக் கேற்ப வேறுபட்டும் தனித்துவம் பெற்றும் மலர்ச்சி பெற்றிருப்பதைக் காண

(7 ஆம் பக்கம் பார்க்க)

★வேண்டாதவரை இறுக்கிப் பிடித்து, மற்றவரை விளாசச் செய்யும்--

# கிராமத்து 'விலக்குப் பிடிக்கும்' முறையிலான இந்தியாவின் மத்தியஸ்தம் பொருத்தமா?

தமிழ் மக்களின் போராட்டம் அகிம்சைப் பாதையில் நின்று விலகி, அரசின் கெடுபிடிகளாலும் வன்முறைகளினாலும் ஆயுதப் போராட்டமாக உருவெடுத்தது, 1983 ஒரு திருப்புமுனை, அன்றிலிருந்து இந்திய அரசுப் பிரதிநிதிகளின் வருகையும், பேச்சுவார்த்தைகளும் மாநாடுகளும் இலங்கையிலும் இந்தியாவிலும் வேறு பல நாடுகளிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இந்திரா காந்தியின் அணுகுமுறைக்கும் மகன் ராஜீவின் இராஜதந்திரத்துக்கும் பாரிய வேறுபாடுகள் இருக்கின்றன. இதுகாலவரை இந்தியாவின் பங்குபற்றி சுருக்கமாகக் கூறுவதானால் இலங்கை அரசின் அழுக்குத் துணிகளை (ஏற்றுக்கொள்ள முடியாத திட்டங்களை) சலவை செய்து (மாற்றியமைக்கப்பட்ட திட்டங்களாக) வெள்ளைத் துணிகளாக இங்கு கொண்டுவந்து சேர்ப்பிப்பதுதான் நடைபெறுகிறது.

இலங்கைத் தமிழர்கள் முப்பது ஆண்டு காலமாக சுதந்திரப் போராட்டத்தினை நடத்தி வருகிறார்கள். அவர்களை இந்தியா இதுகாலவரை ஏன் அங்கீகரிக்கவில்லை?

நிக்கரகுவா, தென் ஆபிரிக்கா, அங்கோலா, நமீபியா இப்படிப் பல 'களங்களில்' தனது பங்களிப்பை அது செய்து வருகிறது பி. எல். ஓ, சுவாப்போ, SWAPO போன்ற அமைப்புகளை அங்கீகரித்திருக்கின்றது. அத்துடன் அவற்றுக்குத் தமது நாட்டில் தூதரக மற்றும் உரிய அந்தஸ்தும் வழங்கியிருக்கிறது. இத்துடன் சர்வதேச சபைகளில் 'பார்வையாளர்கள்' அந்தஸ்தையும் அவற்றுக்குப் பெற்றுக் கொடுத்திருக்கின்றது.

> இனப்பிரச்சினை சம்பந்தமான கட்டுரையாளரின் ஒரு கண்ணோட்டம் இது. கருத்துக்கள் அவரின் சொந்தக் கருத்துக்களே.
>
> —பிரதம ஆசிரியர்

தமிழ் ஈழத்தை உருவாக்கினால் தமிழ்நாடும் ஒரு காலகட்டத்தில் துணைக்கண்டத்திலிருந்து பிரிந்து போய் விடுமென்ற பயப்பாடு இந்திய மத்திய அரசுக்கு இருக்கலாம். மேலும் இந்திய அரசியற் சட்டம் பிரிவினையை எதிர்த்த போதிலும் திராவிடக் கோரிக்கை முற்றாய் மறையவுமில்லை. மடியவுமில்லை.

மொழிவாரி மாநில அரசுகளின் கொள்கை பற்றித் தனது உட்கருத்தை வெளிப்படையாகக் கூறியுள்ளார் ராஜீவ். இந்தி மொழி ... இந்தியாவின் ஒருமைப்பாட்டை நிலைநாட்ட ... இந்திய அரசியல்வாதிகள் விரும்புகிறார்கள். ஆனால் திராவிடத்தின் பலத்த எதிர்ப்பினால் ஆங்கிலத்தையும் இணைத்து வைத்திருக்கிறார்கள். இதே ராஜீவ் காந்தி இலங்கையில் மொழிவாரி மாநிலத்தை

அரசியல்

ஆதரிக்காமல் விட்டாலும் ஆச்சரியமில்லை.

எமது உரிமைப் போராட்டத்துக்கு குரல் கொடுக்கத் ... தமிழ்நாட்டு ...

ஆனால் தமிழ்நாட்டில் இப்போதைய தலைமை இருக்கும் வரை மத்திய அரசை தட்டிக் கேட்கும் துணிச்சல் வரமுடியுமா?

திருத்தணிக்காகப் போராடிய ம. பொ. சி. யும், டல்மியாபுரப் போராட்டத்தை நடத்திய கருணாநிதியும் இன்று பலமிழந்துவிட்டார்கள். 'நொன்சென்ஸ்' என்று ஒருதடவை கூறியதற்காக 'நேருவே திரும்பிப் போ' என்று போர்க் கொடி உயர்த்திய கொண்டோர் காங்கிரஸுடன் இணைவதற்கு நானா நீயா என்று உட்போராட்டம் நடத்துகின்றனர்.

இந்நிலையில் தமிழ்நாடு

இனப்பிரச்சினை

அரசு தட்டிக் கேட்கும் திராணியற்று நிற்கிறது.

சமீபத்தில் ஈழப் போராளிகள் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டு அவமானப்படுத்தப்பட்டதும், ஆயுதங்களைப் பறிமுதல் செய்ததும் உல

அண்ணா இன்று அங்கில்லை. அண்ணாவின் வாரிசுகள் என்று கூறிக்

—க. முத்துக்குமாரசாமி—



பெங்களூர் 'சார்க்' மாநாட்டில் ஸ்ரீலங்கா ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா தாம் மகாத்மாகாந்தியின் அகிம்சை வழியை பின்பற்றுவதாகக் கூறியிருந்தார் அல்லவா? அதனை வைத்து 'குமுதம்' பத்திரிகை வெளியிட்ட கடார்த்தச் சித்திரம் இது.

கறிந்த உண்மை. நேரடியாக தமிழ்நாட்டு அரசோ அல்லது மத்திய அரசோ பொறுப்பேற்க

(7 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தும்மலோ, தும்மல்!

*********
*********

மறைக்க முடியாத தும்மல்!

# வலிய வரும் தும்மல்; வலிந்து வரும் தும்மல்

# இரண்டையும் வைத்து வள்ளுவனின் நாடகம்

அச்சு; அச்சு; "புறப்படும்போது தும்முகிறானே என்ன நடக்குமோ ஏது ஆகுமோ" என்று எங்கள் பாட்டி சொல்கிறாள். கொஞ்சம் நின்று போ என்கிறாள்.

தன்னைவிட்டுப் பிரிந்து உத்தியோகத்திற்குச் சென்ற கணவனைப்பற்றி வாய் இனிக்க, வாய் நிறைய மனைவி நினைக்கிறாள் அவனேயே பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறாள். பின்னர் இன்று முழுவதும் அவரைப்பற்றியே பேசிக்கொண்டிருந்தேன் அவருக்குத் தும்மல் ஏற்பட்டிருக்கும். சாப்பிடும்போது புரையேறி இருக்குமோ என்றும் எண்ணுகிறாள்.

மாணவன் ஒருவன் விடுதியில் இருக்கிறான்.

ஒரு நாள் அவசரமாகச் சாப்பிட்டான் புரையேறிவிட்டது கிராமிய வழக்கிலே. புறைக்கடித்து விட்டது' என்றும் சொல்வர். உடனே தலையில் தட்டிக்கொண்டு கொஞ்சம் தண்ணீரும் குடித்தான் அவனது புதிய நண்பனோ "ஓகோ உன் தாய் உன்னை நினைக்கிறாள் அதனால்தான் உனக்குப் புரை யேறிற்று" என்று வேடிக்கையாகச் சொல்கிறான்.

இப்படியான நம்பிக்கை எமக்கு எப்படியோ ஏற்பட்டுவிட்டது வீட்டில் எமது குழந்தை தும்முகிறது. உடனே "நூறு வயசு" என்று வாய்விட்டுச் சொல்கிறோம். தும்மின சத்தம் காதிலே விழுந்ததோ இல்லையோ. தும்மை அறியாமலேயே இந்த வாழ்த்தைச் சொல்லிவிடுகிறார்கள்.

சிலர் மழைகாலத்திலும் பனிகாலத்திலும் பல தடவைகள் தும்முகிறார்கள் மூக்கடைக்கிறது தும்முகிறோம் என்கிறார்கள்

இந்த இடத்தில் இன்னொன்றும் ஞாபகம் வருகிறது எதை மறைத்தாலும் தும்மலையும் காதலையும் மறைக்கமுடியாது என்று உலக மகா கவி ஷேக்ஸ்பியர் சொல்கிறார்.

இவ்வாறுக நம்பிக்கைகள் பழக்க வழக்கங்களின் தமது அன்றாட வாழ்வுடன் பின்னிப் பிணைந்துள்ளன. இவை எல்லாம் அறிவுடைமையா அறியாமையா என்ற கேள்வியும் எழுகின்றது

திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இருந்தவர் இத்தி தும்மலைப் பொருளாக வைத்து அவர் ஒரு நாடகம் நடத்துகிறார்

காதலனும் காதலியும் ஒருவர் மீது ஒருவர் நிறைந்த காதலுடைய வர்களாக வாழ்ந்து வருகிறார்கள் அவன் அவளை

## புத்தொளி

விட்டுப் பிரியும் சந்தர்ப்பம் ஏற்படவில்லை

ஒரு நாள் அவன் வெளியே போகநேர்ந்தது வழிமேல் விழி வைத்துப் பார்த்திருந்த காதலி காதலன் வெகு நேரமாகியும் திரும்பி வராதது கண்டு தவிக்கிறாள் காதலன் வெகு நேரம் கழித்தே வீட்டுக்கு வந்தான் பொறுத்துப் பொறுத்துப் பொருமிக்கொண்டிருந்த அவளுக்கு காதலனைக் கண்டதும் கோபம் மேலிட்டது ஆதரவுக்கும் அன்புக்கும் பதில் ஆத்திரப்படுகிறாள் பேசாமடந்தையாக இருக்கிறாள். சமாதானம் பல சொல்லியும் அவனால் தன் அன்புக் குரியவளின் கோபத்தைத் தணியவைக்கமுடியவில்லை. அற்ப காரணத்தால் அன்றிரவு முழுவதும் அசுமே கழிந்தது

பொழுது விடிந்ததும் காதலிக்குக் கோபம் தணிந்தது. முதல்நாள் இரவு நடந்தது பற்றித் தன் தோழியோடு பேசிக்கொண்டிருக்கிறாள் பேசாமடந்தையான தன் காதலியைப் பேச வைக்க ஒரு உபாயத்தைக் கையாண்டான் காதலன் அந்த உபாயம் தான் என்ன?

'ஊடியிருந்தேமாத் தும்மினார்' என்றார் நாயகி ஊடியிருந்த போது அவன் தும்மினான். தும்மல் இயல்பாக வராது வேண்டுமென்றே வரவழைக்கப்பட்டது. நாயகன் தும்மினதைக் கேட்டதும் அவள் தன்னை அறியாமலே 'நூறுவயது' என்று வாழ்த்துவாள் என்று அவன் அந்த உபாயத்தைக் கைக்கொண்டான். அவளுடன் உரையாடிக் கொண்டிருக்கிறான் தான் தும்மினதையும் ஒத்துக் கொண்டான் அவள் அப்போது என்ன செய்தாள்?

வருந்தினாள் தும்மினானே; தும்மியவுடன் இயல்பாகவே 'நீர்க்காயுசு' என்று சொல்லி வாழ்த்தினாளாம் இயல்பாகத் தும்மின அவள் சற்று சிந்தனையிலிருந்து விடுபட்டவளாக மீண்டும் கோபாவேசத்துடன் காணப்பட்டாள். 'என்னையன்றி வேறு யாரோ ஒரு பெண்ணிடத்து நீ அன்பு செலுத்துகிறாய் போலத் தெரிகிறது அப்பெண் இப்போது நினைப்பதனாலல்லவா உனக்கு இங்கே தும்மல் வந்தது' என்று கேட்கிறாள். அவனுக்கு அழுகையும் வந்துவிட்டது

ஊடியிருந்தேமாத் தும்மினார்; யாம் தம்மை நீடுவாழ் கென்பாக்(கு) அறிந்து

இது பற்றி நாயகன் என்ன சொல்கிறான் என்பதையும் கவனிப்போம். நாயகன் தன் தோழ

வழுத்தினாள் தும்மினேனாக - அழித்தழுதாள் 'யாருள்ளித் தும்மினீர்' என்று

இந்தக் குற்றச்சாட்டைக் கேட்ட அவனுக்கு அவளில் இரக்கம் ஏற்பட்டது. இவனும் அவளிடத்து ஒத்த அன்புடையவன் கோபத்தினால் சொல்லப்பட்ட வார்த்தையினால் அவன் குழுறினான். மீண்டும் ஒரு தும்மல் வந்தது எப்படியோ அடக்கிவிட்டான் சத்தம் வெளியே வரவில்லையே ஒழிய தும்மலை அடக்க இவன் பட்ட பாடு நாயகி கண்ணில் பட்டுவிட்டது இவனது செய்கையானது அவள் காட்டின குற்றத்தை அவன் ஒப்புக்கொண்டு அதை மறைக்க முயல்வதுபோல

தோன்றியது. இதை நினைத்து மறுபடியும் அழுதாளாம்.

தும்முச் செறுப்ப அழுதாள்; நுமர் உள்ளல் எம்மை மறைத்திரோ? என்று

உணர்ச்சியும் மனோபாவமும் மக்களுக்கு இன்றிருப்பதுபோல் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னும் இருந்திருக்கிறன என்பது தெளிவாகிறது இத்தகைய பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள் பயனற்றவை என்று ஒதுக்கிவிடலாம். ஆனால் வாழ்க்கையை நயம்பட நடத்தவும் சுவையையும் அழகையும் கண்டு மகிழவும் இவை பெருதவியாக அமைகின்றன.

*

## விறகு பொறுக்குதல்

இந்திய கிராமங்களில் பாரம்பரியமாக அடுப்புக்கு விறகு பொறுக்கும் கலை அகிம்சா பூர்வமாக அமைந்திருந்தது. மரங்களில் பட்டுப்போன கிளைகள் மற்றும் குச்சிகளை ஒடித்து விறகாகப் பயன்படுத்தினார்கள்.

# "பயங்கர மனிதன்: சங்கிலி மன்னன்"

# பாய்க் கப்பலேறிய பறங்கியரின் கூற்று!

நல்லூர் இராஜதானியின் வெற்றி விழாக் கொண்டாட்டத்திற்கு இன்னும் சில நாட்களே உண்டு விழாவுக்கான ஏற்பாடுகள் ஜாருராக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன... அதேவேளை போர்ப்பயிற்சிகளும் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன சங்கிலி மன்னன் வெற்றி பெற்றுச் சரியாக மூன்று வாரங்களின் பின் யாழ்ப்பாணம் வந்திருந்தான்

ஊர்காவற்றுறை அதிபதியான காக்கை வன்னியன் முதலில் சம்பிரதாயத்துக்கு மன்னனைச் சந்தித்து விட்டு பின்னர் இரகசியமாக மந்திரியைச் சந்தித்து மந்திராலோசனை நடத்த வேண்டுமென்பதே அவனது நோக்கம். காக்கை வன்னியனை வரும்படி மந்திரியும் இரகசிய ஓலை அனுப்பியிருந்தானல்லவா?

குறுந்தாடியும் மீசையும் ஜடையும் கொண்ட காக்கை வன்னியன் இடுப்பிலே குத்துவாள் சொருகிய வண்ணம் அரண்மனை நோக்கி விரைந்து கொண்டிருக்கிறான்

நல்லூர் கோட்டையில் சேனைவீரர்களின் போர்ப் பயிற்சிகளைப் பார்வையிட்ட பின் அரண்மனைக்குத் திரும்பிக் கொண்டிருந்த சங்கிலி மன்னன் தன்னை நோக்கி காக்கை வன்னியன் வந்து கொண்டிருப்பதைக் காண்கிறான். காக்கை வன்னியன் முன்பு நல்லூர் தளபதியாக இருந்தவன். அதன்பின் சங்கிலி மன்னனால் ஊர்காவற்றுறைக்கு அதிபதியாக நியமிக்கப்பட்டவன் சிறந்த போர் வீரனுதலால் மன்னன் அவன் மீது அன்பும் மதிப்பும் வைத்திருந்தான் ஆனால் மந்திரியோ காக்கை வன்னியனுக்கு பதவி மோகமூட்டி அவனைத் தனது கையாளாக்கி வைத்திருந்தான்

மன்னனை அண்மித்த காக்கைவன்னியன் பொய்ப் புன்னகையுடன் 'வெற்றி வேந்தன் வாழ்க' என்றவாறு இருகரம் நீட்டி மன்னனைத் தழுவிக் கொள்ள மன்னனும் அவனைத் தழுவிப் பிரிகிறான்.

வன்னி: வணக்கம் மன்னா!

மன்னன்: சுணக்கம் ஏனோ'

வன்னி: வேந்தே! தங்கள் வெற்றிச் செய்தி கேட்டு அகமகிழ்ந்தேன். தங்கள் சமூகத்துக்கு ஓடோடிவந்து வாழ்த்த வேண்டுமெனத் துடித்திருந்தேன் ஆயினும் எனது நிலை தாங்கள் அறிந்ததே... பஞ்சாயத்தாரிடம் இருமுறை சொல்லியனுப்பியிருந்தேன்...

மன்னன்: சொன்னார்கள்...

வன்னி: வேந்தே! முத்துச் சலாபம் ஊர்காவற்படை திரட்டிக் காவலிருந்தேன்

கடைசியாக தங்களின் வெற்றிச் செய்தி கேட்ட பின்னரும் நெடுந்தீவில் சில பறங்கியர் இருப்பதாக அறிந்து அவர்களை நோட்டம் விட நம்மாட்கள் சிலரை அனுப்பி வைத்தேன், நேற்று அங்கிருந்த பறங்கியர் விரக்தியுடன் வெளியேறியதை அறிந்த பின்னர் தான்

## நெடுந்தீவில் சொன்னார்கள் என்று காக்கைவன்னியன் முறையீடு!

தரிப்புத் துறையிலிருந்து கொண்டுவரப்பட்ட முத்துக்கள் ஊர்காவற்றுறை ஆலயங்களில் சேமித்து வைக்கப்பட்டிருந்தன. போர் நடந்து கொண்டிருந்த வேளை பறங்கியர் அவற்றை கொள்ளையிட வரக்கூடுமெனக் கருதினேன்.

அல்லாமலும் நெடுந்தீவு தொலைவிலிருப்பதால் யுத்தகாலங்களில் பறங்கியர் ஊர்காவற்றுறையை தமது கூடாரமாக்க முயலலாமெனவும் எண்ணினேன் அதனால் இன்று தங்களைச் சந்திக்க ஓடோடி வந்தேன்

மன்னருக்கு அணித்தாய் சிலாபத்துறைக்கு பக்கத்தில் அமைந்தது தான் முத்தரிப்புத்துறை. முத்துச்சிப்பிகள் உடைக்கப்பட்டு முத்துக்கள் பிரித்தெடுக்கப்பட்டது அங்குதான்.

அக்கிராமம் பூராவும் பெருவாரி சிப்பித் துகள்கள் மணலில் கலந்து கிடப்பதை இன்றும் காணமுடியும். அக்காலத்தில் முத்துச்சிலாபம் என அழைக்கப்பட்ட கிராமம் தான் இன்று சிலாபத்துறை என அழைக்கப்படுகிறது

அதேபோல அன்றைய முத்தரிப்புத்துறை என்ற பெயரும் இன்று 'அரிப்பு' என்று குறுகிக் கொண்டது இப்பகுதிக் கடல்கள் முத்துக்குளிப்பிற்குப் பேர் போனவை இங்கு கிடைத்த முத்துக்கள் உரோமபுரி, கிரேக்கம், சீனம், யவனம் ஆகியாம் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன

முத்துக்குளிப்பை பார்வையிடச் செல்லும் யாழ்ப்பாண மன்னர்கள் தாம் தங்குவதற்காக அரிப்பு கிராமத்தின் கடலோரத்தில் பெரும் மாளிகையொன்றைக் கட்டியெழுப்பியிருந்தார்கள் இன்று அம்மாளிகையை பெருங்கடலின் பேரலைகள் மோதி அழித்து வருகிறது வேள்விச் செவியர் அதை அல்லிராணிக் கோட்டை எனக் கூறுவர்

மன்னன்: ஆயினும் தீவுக்கூட்டங்களை அடிக்கடி கண்காணிக்க வேண்டும் குறிப்பாக நெடுந்தீவில் நீவிர் கண் வைக்க வேண்டும் வெண்முத்து விளையும் நம்நாட்டில் விஷவித்து விதைக்க மீண்டும் பறங்கியர் வரக்கூடும்.

| பறங்கியரின் களிமண் கோட்டை மீது படைகொண்டுமோதிய நல்லூர் அரசு |
|---|
| (பகுதி: பன்னிரண்டு - ஆ) |

வன்னி: (மன்னனின் சொற்களால் தாக்குண்ட வன்னியன் தன்னைச் சமாளித்துக் கொண்டு) வேந்தே! அவர்கள்தான் தோற்றுப் போய் விட்டார்களே?

**ம. க. அ. அந்தனிசில்**

மன்னன்: ஆமாம்... போர்க்களத்தில் தோற்றுப்போய்விட்டார்கள்... மண்கோட்டையில் அற்றுப்போய்விட்டார்கள்.. என்றாலும் தொற்று நோய் போன்றவர்கள்...

வன்னி; வேந்தே! மண்கோட்டைப்போரில் ஒருவரும் மீதம் இல்லையென்று...

மன்னன்: எம் பூமியை கலைப் பயங்கர மனிதன்' என்று பறங்கியர் நெடுந்தீவில் சொன்னார்களாம்

மன்னன்: (ஆத்திரம் மேலிட) ஹ...ஹ...ஹ... நான் பயங்கரமனிதனா... என் மண் காக்க நான் போராடினால் பயங்கரவாதியா? எம் மண்ணை நாம் காப்பது பயங்கரவாதமா? அது தான் பறங்கியரின் வாதமா?

கூம்முட்டை மண்டையர்கள்... ஆதிக்க வெறியால் மண்டை கலங்கிப் பிதற்றுகிறார்கள். இப்பூவுலகை ஏமாற்ற அப்படி அலம்புகிறார்கள்... பொய்யாய் புலம்புகிறார்கள்...

வன்னி: (ஒத்துப்பாடுகிறான்) ஆமாம் வேந்தே! நம் நாட்டுக்காக நாம் விழுங்கப் பூதம் போல் புறப்பட்டவர்களை நாம் மீதம் விட முடியுமா?

வன்னி: வேந்தே! தங்களின் வீரத்தையிட்டு பறங்கியர் மிகவும் பயந்து விட்டார்கள் எந்த நாட்டிலும் தமக்கு இக்கதி நேர்ந்ததில்லையாம்... அதனால் தங்களை அவர்கள்......

மன்னன்: ஏன் நிறுத்திவிட்டீர்?

வன்னி: வேந்தே! என் நா கூசுகிறது......

மன்னன்: பரவாயில்லை... சொல்வீராக!

வன்னி: மன்னா... தங்களை போராடியதை அப்படிக் கயிறு திரிக்கிறார்கள் இனி இந்தப் பக்கம் தலை வைத்தும் படுக்க மாட்டார்கள்...

மன்னன்: வெற்றிப் பூரிப்பால் கண்ணுறங்கி விடுபவன் நான் அல்ல அவர்கள் பலமான எதிரிகள்... பிறர் மண்ணை அபகரிக்க சதா பித்துப்பிடித்தலையும் பயங்கரவாதிகள் அவர்கள்தான்... அவர்களையிட்டு என்றும் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்... ஆமாம் நெடுந்தீவிலிருந்த பறங்கியருக்கு தகவல் எப்படிப் போகிறது?

வன்னி: வேந்தே! விதிப்போரில் தோற்றோடிய பறங்கியரில் மூவர் பண்ணைத்துறையில் கப்பலேறி நெடுந்தீவுக்குப் போய் விவரம் சொல்லியிருக்கிறார்கள்...

மன்னன்: ஓ... அவர்கள் தரங்கம்பாடிக்குப் போகவில்லையா?

வன்னி: இல்லை மன்னா... அவர்கள் நெடுந்தீவுக்குத் தான் போய்ச் சேர்ந்திருக்கிறார்கள்... பின்னர் இங்கு நடந்த நிகழ்வுகளை ஊர் மக்கள் மூலம் அறிந்திருக்கிறார்கள்......

மன்னன்: ஊர் மக்களா? அல்லது பறங்கியரின் எச்சில் இலை நக்கும் பேர்வழிகள் யாரேனும் உண்டா?

வன்னி: (மன்னன் இப்படிச் சொன்னது காக்கை வன்னியனின் இதயத்தில் ஈட்டி பாய்ந்தது போலிருக்கிறது) இல்லை வேந்தே இல்லை...

(6 ஆம் பக்கம் பார்க்க)

## எங்களை ஆள்வதற்கு எங்களுக்குத் திறனுண்டு

த- சிவசுப்பிரமணியம்

புலியின் வாயகப்பட்ட புள்ளிமான் கூடத்தான்
பருந்தின் வாயகப்பட்ட கோழியின் குஞ்சுந்தான்
பாம்பின் வாயகப்பட்ட சிறுதவளை கூடத்தான்
போராட்டம் நடத்துவது மரணத்தின் பிடியிலேதான்

குயிலுக்கும் மொழியுண்டு கூடுகட்டுந் திறனில்லை
காகத்தின் கூட்டையே நம்பி வாழுங் குயிலினம்
தன்னினத்தை வாழ்விக்க முடியாத நிலையுண்டு
எம்மினத்தை வாழ்விக்க எமக்கென்ற நாடுண்டு

எங்களை நாம் ஆள்வதற்கு எங்களுக்குத் திறனுண்டு
உங்களுக்கு உரிமையேது எங்களை ஆள்வதற்கு
வடக்குக் கிழக்குமென்ற வண்டமிழர் வாழ்விடத்தை
மடக்கியுங்கள் குடியமர்த்தி விட்டதனால் உங்களதோ

நாடிருந்தும் மொழியிருந்தும் நயமான இலக்கியங்கள்
நற்றமிழிற் பலவிருந்தும் பண்டைப் பெருமைமிகு
வரலாறு தானிருந்தும் சொந்த நாட்டில்
நாங்களென்ன இரண்டாந் தரக் குடிமக்களோ

அஞ்சியஞ்சி வாழ்ந்திடாமல் அடிமைகளாய் மாறிடாமல்
நெஞ்சும் நிமிர்ந்து நின்று வெஞ்சமரில் உயிர் கொடுக்கும்
நெஞ்சங்களை வாழ்த்திடுவோம். நெஞ்சோடு போற்றிடுவோம்
கொஞ்சும் மழலைகளில் வீரம் நெஞ்சில் ஏற்றி வைப்போம்.

பாரதி பாடல்களைப் பள்ளியிலே சொல்ல வைப்போம்
புள்ளிகள் பெறுவதற்கு மட்டுந்தான் பள்ளிகளோ
வீரத்தை மழுங்கடிக்கும் பாடல்கள் தான் பள்ளியிலே
* "வேம்பினது வீம்பு" விளம்புதற்கோர் எடுத்துக்காட்டு.

குறிப்பு:- ஐந்தாம் வகுப்புத் தமிழ் மலரில் இடம் பெற்ற "ஆலமரமும் நாணலும்" என்பதன் மறுவடிவமே "வேம்பின் வீம்பு"

# பாடம் படிப்பிக்கும் பாங்கு

# திறனாய்வுப் புலமைக்கு சான்று

பண்டிதமணி அவர்கள் சைவாசிரிய கலாசாலையிற் பேராசிரியராயமர்ந்து பெரும்பணி புரிய முற்பட்டகாலம் கல்வியுலகில் ஒரு திருப்புமையத்தைக்கண்ட காலமாகும். திருப்திகரமான சைவச்சூழலிலே படிப்பார்வமும் பயிற்சி நெறியில் ஊக்கமுங் கொண்ட இளைஞர்கள் பலர் சைவாசார நியமந் தவறுதவர்களாய் அங்கே கூடியிருந்தனர்.

அவர்களுட் சிலர் முன்னரே பண்டிதமணியவர்களை மட்டுவிற் காவிய பாடசாலை வகுப்புகளில் இளமையிற் கண்டு கற்றுப் பழகியவர்கள். அவர்களுக்கு மேலாக வயது வந்தவர்கள் ஒரு சிலர் இருந்தார்கள் அவர்கள் சைவப் பாரம்பரியத்தில் வந்த குமாராயும் ... இலும் நன்கு பயின்றவராயும் இருந்தார்கள்

விழிசிட்டி கதிரிப்பிள்ளை

அவர்களுள் பெரியவர்களுள் ஒருவராய், முன்னரே, சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர் அவர்களிடம் கற்று விவேகியாய் இருந்தவர் அவர்

| பண்டிதமணி |
|---|
| வரலாறும் காலமும் |

விழிசிட்டிப் பண்டிதர் கதிரிப்பிள்ளை என்னும் பெரியாராவர்.

கல்வித் துறையில் பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே எனவரும் தொடரின் ஆழமான கருத்து, குருவிடம் பின்னிற்றலைப் பொருட்படுத்தாது பணிவோடு நின்று கற்றனமென இத்தகைய மாணக்கர் ... மானம் பண இரசனையையும். சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் அவர்களிடம் கற்று விவேகமுற்ற காவிய தாடனங்களையும், மனேச்சர் கைலாசபிள்ளை அவர்களிடம் பயின்ற நகைச்சுவையையும், வித்துவான் சுப்பையபிள்ளை அவர்களிடம் முகந்த இலக்கண அமைவையும், ஆசிரியப் பயிற்துக்காட்டி, எடுத்த பாடத்துக்கு உரிய கலந்த ஆர்வம், அங்கே பேராசிரியராய மர்ந்த பண்டிதமணி அவர்களின் ஆசிரியத் தொழிலின் அணுகுமுறையினை நன்கு அமைத்துவிட்டது

அவரும் தாம் முன்னர் சாவகச்சேரிப் பொன்னம்பலபிள்ளை அவர்களிடம் அறிந்த இராமாயண இரசிகர் மாணிக்கவேல் முதலானோரிடம் பழகி முறுக்கேறிய வித்தையையும், தமக்கு இயல்பாயமைந்த வாக்கு வல்லபம், துணிவு முதலானவற்றையும் சாதனமாகக் கொண்டு பேராசிரியர் பீடத்தை அலங்கரிப்பாராயினார்

பாடத்தை அழகு அலகாகப் பிரித்து, ஆய்ந்து செய்து, அணுகுமுறையினை நாடவப்படுத்தி மெல்லிய கம்பீரமான குரலில் படிப்பிக்கத் தொடங்கியதும், மாணக்கர்கள் அமைதியாக அங்காந்த வாயோடமர்ந்து செவிமடுப்பவர்.

பாடத்திலே பல திருப்புமையங்களை அமைத்துக் கிளைக்கதைகள் சொல்லி, பாடல்களை ஒப்புநோக்கிப் படிப்பிக் கலாசாலையில் அதிபர் பொன்னையா அவர் வேலையில் மீளும் அற்புத ஆற்றல் அவரிடமிருந்தது. அது இலக்கியத் திறனாய்வுக்கு இன்றி யமையாததுமாம்.

அக்காலத்தில் இலங்கையில் கல்வி முறையிலேயே ஒருவித மாற்றம் உருவாகிக் கொண்டு வந்தது 1833 ஆம் ஆண்டளவில் இலங்கைத் தேசாதிபதிகளுக்கு ஆட்சிப் பொறுப்புக்கு உதவியாகக் கோல்புறாக் ஆணைக்குழுவினர் அமைத்த சட்டசபை, சட்ட நிருபணசபை என்னும் சபைகள் அடங்கிய ஆட்சி மன்றம் 1931 ஆம் ஆண்டுவரை நிலவியது இடையிடை சிற்சில மாற்றங்கள், திருத்தங்கள் உண்டாக்கப் பெற்றபோதிலும் மன்றத்தின் அடிப்படை அமைப்பில் எவ்வித மாற்றமும் உண்டாக்கப்பெறவில்லை.

இவ்வாறாக 1929 ஆம் ஆண்டளவிலே தான் டொனமூர் அரசியற் குழுவினர் இலங்கைக்கு அரசாங்கசபை என்னும் ஆட்சிமன்றத்தை நிறுவிப் போவதற்கு வழி வகுத்துக் கொண்டிருந்தனர். அந்த அரசிய

**க. சி. குலரத்தினம்**

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அக்கா உதவி செய்வாயா?

எனக்கு வாழ்க்கையில் என்றைக்குமே நிம்மதி கிடைக்காது போலிருக்கிறதே

கணவனின் மறைவுக்குப்பிறகு, சென்றவாரம் நெசவு நிலையத்துக்குப் போக ஆரம்பித்த வரையில் எதையோ இழந்து, பாலைவனத்தில் கடும் வெயிலில் பிரயாணம் செய்வது போன்ற மனநிலையில் காலம் தள்ளினேன்.

ஆனால் இந்த ஒருவாரமாக நெசவுநிலையத்துக்குக் காலையில் போய் மாலையில் களைத்து வீடு திரும்பினாலும் மனதில்

## அத்தியாயம் ஐந்து

ஒரு நிறைவும், அமைதியும் ஏற்படுவதை உணர்ந்தேன்

இனி என் வாழ்க்கை முறை இதுதான் இப்படி உழைத்து, என் மகனை வளர்த்து ஆளாக்குவது தான் வாழ்வின் குறிக்கோள் என்றெல்லாம் மனதுள் திட்டமிட்டுக் கொண்டிருந்தபோது இப்படி ஒவ்வொரு பிரச்சினை ஏற்படுகிறதே

எல்லாப் பிரச்சினையையும் என் தலையில் தூக்கிப் போடமுடியுமா? என்று மனதுக்குச் சமாதானம் கூறுகிற மறுகணமே குடும்பத்தில் ஒட்டாத அப்பாவுடன் தினமும் போராட்ட வாழ்க்கை நடத்துகிற அம்மாவின் முகம் மனக்கண்முன் நிழலாடுகிறது.

நான் தான் பெற்றோர்களுக்கு முதற்பிள்ளை எனவே இக்குடும்பத்தின் நன்மை தீமைகளில் தலையிட்டு நடவடிக்கை எடுக்க எனக்கும் உரிமையுண்டு என்று மனதுக்குப்படுகிறது

லலிதா மேசையில் ஏதோ படித்துக் கொண்டிருக்கிறாள். பக்கத்துக் கதிரையில் போய் அமர்கிறேன். ஒரு கணம்

என்னை நிமிர்ந்து பார்த்தவள் எதுவுமே பேசாமல் மீண்டும் புத்தகத்தில் கண்களை ஓட விடுகிறாள் இவளா இப்படி மாறிவிட்டாள்? சதா தொண தொணவென்று என்னோடு ஊர் வம்பு பேசுபவளாயிற்றே? இப்படிப் பேசாமல் நத்தை போல மௌனியாக அமர்ந்திருக்கிறாளே என்று நினைத்துப் பார்க்க வியப்பாயிருக்கிறது

இவ்வளவு நாளும் சலனமற்ற, குழந்தையுள்ளத்தோடு உலவிய இவளது உள்ளத்தில் இப்போது கள்ளம் புகுந்து விட்டது அதை மறைக்க எவ்வளவோ பிரயத்தனப்படுகிறாள் குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும் என்பார்களே அதைப் போன்று தான் இவளது இப்போதைய நிலையும்

அவளைப் பார்க்கும் போது ஒருபக்கம் மனதில் அனுதாபம் தோன்றினாலும், அவளின் வயது, எங்கள் குடும்ப நிலைமை, என் அவலநிலை இவற்றையெல்லாம் சிந்தித்துப் பாராமல் இப்படி நடந்து கொள்கிறாளே என்பதை நினைக்க மனதுள் ஆத்திரம் கிளைவிடுகிறது

இப்பொழுது ஆத்திரப்பட்டால் காரியம் கெட்டு விடும் என்ற உணர்வு தலைதூக்க என்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு ஒரு முறை தொண்டையைக் கனைத்துக் கொள்கிறேன்

திரும்பிப் பார்க்கிறாள் லலிதா

'லலிதா' என்கிறேன் பாச உணர்வு குரலில் தலைகாட்ட

'என்னக்கா' அவள் என்னை நேருக்கு நேர் பார்க்கத் தயங்குகிறாள்.

'லலிதா, நான் உன்னிடம் ஒரு விசயம் தனிமையில் பேச வேண்டும் கொஞ்சம் பொறுமையாக நான் சொல்வதைக் கேட்பாயா?

'என்னக்கா! அப்படி என்ன விஷயம்?' அவள் குரலில் பதட்டம் எனக்குப் புரிகிறது.

'லலிதா, நான் உன் அக்காள். அதனாலே உன் வாழ்க்கையில் எனக்கும் அக்கறை இருக்கும் என்று நீ நம்புகிறாயல்லவா?' என் குரலில் ஏதோ உறுதி

'என்னக்கா நீ பீடிகை போடுகிறாய்?'

'தங்கச்சி, நான் சுற்றி வளைச்சுப் பேச விரும்பவில்லை கொஞ்ச நாட்களாக நீ யாரோ ஒரு பையனுடன் நெருக்கமாயிருக்கிறாய் என்று கேள்விப்பட்டேன்' நான் வார்த்தையை அளந்து தான் பேசுகிறேன்.

'யார் சொன்ன கதை இது? அவளது குரலின் தயக்கம் தெள்ளத் தெளிவாகப் புலனாகிறது

'உன் அக்காளிடம் பொய் சொல்லாதே! நம்பிக்கையான தகவல் இது!' என்கிறேன் அவளைக் கூர்ந்து பார்த்தபடியே.

'இது சுத்தப் பொய். யாரோ கட்டிவிட்ட கட்டுக் கதை' என்கிறாள்.

அவளைப் பார்க்க அழுது விடுவாள் போலிருக்கிறது. இருந்தாலும் இப்போது அவள் மீது அனுதாபம் தோன்றுவதற்குப் பதிலாகக் கோபம் துளிர்த்து சொந்தச் சகோதரியிடமே பொய் சொல்கிறாளே என்ற ஏமாற்றத்தில் ஆத்திரம் தான் தோன்றுகிறது

'ஏன் லலிதா? இவ்வளவு தானா நீ உன் அக்காளிடம் வைத்திருக்கிற பாசமும் பற்றும். நீ இவ்வளவு தூரம் மாறுவாய் என்று நான் எதிர் பார்க்கவேயில்லை'

அவள் ஒன்றுமே பேசவில்லை சிறிது நேர நிசப்தத்தின் பின் அவள் வாய் திறக்கிறாள்.

'அக்கா! நான் சொல்வதை நீ நம்பமாட்டாயா?'

ஒரு கணம் என்னைத் தைப் பொத்தி அறையலாமா? என்று ஆத்திரம்

> அவளைப்பார்க்கும் பொழுது ஒரு பக்கம் மனதில் அனுதாபம் தோன்றினாலும்... .... அவளின் வயது.. எங்கள் குடும்ப நிலைமை.. என் அவல நிலை... இவற்றை யெல்லாம் சிந்தித்துப் பாராமல்....

ஏற்படுகிறது. சிரமப்பட்டு அடக்கிக் கொண்டு கத்துகிறேன்.

'லலிதா! என்னை என்ன பைத்தியக்காரி என்று நினைத்தாயா? நேற்று நீ யாரோ ஒருத்தனின் கையைப் பற்றிக் கொண்டு கடை வீதியில் திரிந்ததை நானே இந்த இரண்டு கண்ணாலும் பார்த்தேனடி!...'

இதை அவள் எதிர் பார்க்கவில்லை மேசையில் முகத்தைப் புதைத்துக்கொண்டு குலுங்கிக் குலுங்கி அழுகிறாள். என் படபடப்பு இன்னும் அடங்கவில்லை. நான் வீணாக உணர்ச்சிவசப் பட்டு விட்டேன் போலத் தோன்றுகிறது. மெல்ல அவளது தலையை ஆதரவோடு தடவுகிறேன். தலை நிமிர்ந்து பார்க்கிறாள்.

'யார் அவன்?' என் குரலில் முன்னைய கடுமை இல்லை

அவர் பெயர் ராஜா. என்னோடு ரியூசன் கிளாஸுக்கு வருவார்' தட்டித் தடுமாறிச் சொல்லி முடிக்கிறாள்.

'எத்தனை நாட் பழக்கம்? எந்த ஊர்ப் பையன்?' என் குரலில் கனிவு.

'உரும்பிராய்ப் பிரக்கிராசியார் பொன்னம்பலத்தினுடைய ஒரே மகன் அவர்' என்கிறாள் தலையைக் குனிந்து கொண்டே.

'அப்போ பெரிய இடத்துப் பையன் என்று சொல்லு'

'ஆமாம் அக்கா' முதல் தடவையாக அக்கா போட்டுப் பேசுகிறாள்

'பெரிய இடத்துப் பையன்களுக்கு இப்படி ஒரு பொழுது போக்கு' என்கிறேன்.

'இல்லை அக்கா!... அவர் ரொம்ப நல்லவர்!...'

அடடே! அவராமே!... நல்லவராமே!... இவள் அவன் பேச்சில், சிரிப்பில், மிடுக்கில் மயங்கியிருப்பாள். பருவக் கோளாறில் காதல் என்று சொல்லி மனதைப் பறி கொடுப்பது.. பிறகு, ஒரு நாளைக்கு அவன் உத்தியோகம் கிடைத்ததும் அந்தஸ்துக்குத் தக்கவாறு சீதனத்தோடு பெண் எடுக்க இவளைப் போன்ற அபலைகள் தற்கொலையை நாடுவதைத் தவிர வேறு என்ன வழி இருக்கிறது?

'லலிதா! சொல்லு உன்னை மனைவியாக ஏற்றுக்கொள்ள அவன் தயாராயிருக்கிறானா? அல்லது..' நான் முடிக்கும் வகையறியாது தடுமாறுகிறேன்.

'அக்கா!' என்கிறாள் உரத்து 'அவர் ஒரு இலட்சியவாதி. எந்த நிலையிலும் சீதனம் வாங்காமல், வாழ்க்கையில் ஒரு ஏழைப் பெண்ணுக்கு வாழ்வளிப்பதுதான் அவரது இலட்சியமாம்.

'அப்படியா?' என்கிறேன். என் குரலில் தொனிப்பது ஆச்சரியமா? அவநம்பிக்கையா? என்னாலேயே இனம் கண்டு கொள்ள முடியவில்லை

'இப்படித் தான் கொள்கை, குறிக்கோள், இலட்சியம் என்று இளரத்தத் துடிப்பில் மேடைகளில் கத்துகிறவர்கள், பிறகு எல்லாவற்றையும் மறந்து, மறைந்து தம் சொந்த இலாப நஷ்டங்களைப் பார்ப்பது இன்று நேற்றா?

லலிதா தான் சொல்கிறாள். 'அக்கா! உன்னைத் தவிர எனக்கு உதவுவதற்கு யாரும் இல்லை. நீதான் இதை அப்பாவிடம் சொல்லி .'

எனக்கு 'ஐஸ்' வைக்கிறாள். இவள் தான் சற்று முன்னால் எனக்குத் துணிந்து பொய் சொன்னவள் நான் ஒன்றும் பேசவில்லை

'நான் சொல்வது போல நீ நடக்க வேண்டும் தருணம் வரும் போது நானே மற்றவைகளைக் கவனிக்கிறேன்' என்கிறேன் பொறுமையோடு.

'என்ன சொல்கிறாய்?' என்று கேட்கும் பாவனையில் என்னை நிமிர்ந்து பார்க்கிறாள்

'இனிமேல் நீ அவனுடன் சேர்ந்து எங்கும் சுற்றக் கூடாது அது மட்டுமில்லை. அவனை நான் ஒரு தடவை தனிமையில் சந்தித்துக் கதைக்க வேண்டும்'

'சரி, நீ சொல்வது போலவே நடக்கிறேன். நீ அவரைச் சந்திக்கக் கதைக்க ஏற்பாடு செய்கிறேன்'

அவள் இமையோரங்களில் கண்ணீர் துளிர்க்கிறது. அது நன்றி உணர்வினாலேயா? எனக்கு)

(6 ஆம் பக்கம் பார்க்க

## சுண்டெலியார் வைத்த சுவையான விருந்து!

முன் ஒரு காலத்தில் தானியக் களஞ்சியம் ஒன்றின் அடியில் ஒரு சுண்டெலி வசித்து வந்தது. களஞ்சியத்தின் தரையில் ஒரு சிறு துவாரம் இருந்தது. அதன் வழியாகச் சில தானிய மணிகள் வெளியே விழுந்து கொண்டிருந்தன.

சுண்டெலி தானியத்தை நன்றாக உண்டு சுகமாக வாழ்ந்து கொண்டிருந்தது. அது தன் செழிப்பை மற்றச் சுண்டெலிகளுக்கும் காட்ட வேண்டும் என்று ஆசைகொண்டு, துவாரத்தைச் சுரண்டியும் கடித்தும் பெரிதாக்கி விட்டது உடனே மற்றச் சுண்டெலிகளைத் தன் வளைக்கு விருந்தினராக வரும்படி அழைத்தது

என் இடத்திற்கு வாருங்கள்! ஒவ்வொருவருக்கும் நான் விருந்தளிக்கப் போகிறேன். எல்லோருக்கும் தேவையான அளவு உணவு இருக்கிறது என்று அது நண்பர்களிடம் பெருமையுடன் பறைசாற்றிக் கொண்டது.

விருந்தினர்கள் வந்தவுடன் சுண்டெலி எல்லோரையும் தன் வளையின் பக்கமாக அழைத்துச் சென்றது. அங்கே துவாரமே காணப்படவில்லை

துவாரம் சிறிதாயிருந்தபொழு கவனிக்காத களஞ்சியத்தின் சொந்தக்காரன். அது பெரிதானவுடன் அதைக் கண்டு, அதை நன்றாக அடைத்துப் பூசி விட்டான்.

சுண்டெலி நன்றாக ஏமாந்தது. தற்பெருமை கொண்டு தம்பட்டம் அடித்தல் ஒரு போதும் கூடாது. ★

- எஸ். அருள்குமார்
(வைத்தீஸ்வரா வித்தியாலயம்)

## தொலைபேசியின் தோற்றம்

டெலிபோன் என்றழைக்கப்படும் தொலைபேசியைக் கண்டுபிடித்தவர் யார் என்று கேட்டால் அனைவரும் அலெக்சாண்டர் கிரகம் பெல் என்றே பதிலளிப்பர். இச் சாதனையின் பின்னால் ஓர் சரித்திரமே உள்ளது.

இந்த விந்தைமிகு ஆராய்ச்சியின் முன்னோடி ரொபட் கூக்ஸ் என்னும் ஆங்கிலேயராவார். 1667ல் இவரது ஆராய்ச்சியின் பயனாய் அமைந்தது 'ஸ்ரிங்ரெலிபோன்'' 1837ல் பேஜ்- ஹென்றி ஆகியோரின் முயற்சியால் சங்கீதத்தை மையமாகக்கொண்டு அமெரிக்காவின் பொஸ்டன் நகரில் மேற்கொண்ட பணியின் பயனை இன்றைய தொலைபேசிச்சேவையை அறிமுகப்படுத்தினர் அலக்சாண்டர் கிரகம் பெல்.

இதேபோல் இன்னுமோர் அமெரிக்கரான எலிசாகிறே சிகாகோவில் ஆராய்ச்சியை மேற்கொண்டு நவீன தொலைபேசியைக் கண்டுபிடித்தார். இவர்கள் தமது 'கண்டுபிடிப்பினை' பதிவு செய்வதற்கு வாஷிங்டனில் அமைந்திருந்த கண்டுபிடிப்புகள் பதிவு செய்யும் பணியகத்திற்கு விண்ணப்பித்தார்கள்

1876ல் ஒரே நாளில் இருவருடைய பதிவுக் கோரிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. எனினும் பெல்லின் பதிவு இரு மணித்தியாலங்கள் முன்னதாகவே தாக்கல் செய்யப்பட்டிருந்ததால் அலக்சாண்டர் கிரகம் பெல்லே முதன்முதலில் நவீன தொலைபேசியைக் கண்டுபிடித்தவர் எனப் பிரகடனம் செய்யப்பட்டது.

அலக்சாண்டர் கிரகம் பெல் ஓர் விஞ்ஞானி மட்டுமல்ல ஓர் அதிஷ்டசாலியுமாவார். உலகம் உள்ளளவும் அவர் பெயர் நிலைத்திருக்கும்.

க. முத்துக்குமாரசாமி

தொலைபேசிமூலம் கேட்டறிந்தார்கள் இச்சாதனையை 'கல்வனைஸ்ட் சங்கீதம்' என அழைத்தனர்.

1843ல் லாறில் என்பவர் ஜெனிவாவில் மேற்கொண்ட முயற்சியினால் உருக்குக் கம்பியூடாக ஒலியை அனுப்பலாம் என நிரூபித்தார். 1854ல் போரிசியல் என்னும் பிரெஞ்சுக்காரர் தொலைபேசியை அபிவிருத்தி செய்யும் ஓர் கொள்கையை நிலைநாட்டினார்.

இவரது கொள்கையை பிலிப்றெயிஸ் என்னும் ஜெர்மனியர் பிரயோகம் செய்து தொலைபேசிச் சேவையில் அபிவிருத்தி கண்டார்.

இவர்கள் அனைவரினதும் ஆராய்ச்சிகளை

ஆதாரம்:
பிரான்ஸ் செய்தி.

## இரைதேடும் பறவைகள்

கிக்கிக்கி கிக்கிக்கி
கோழிக் குஞ்சு
கிண்டிக் கிளறி இரையைத் தேடும்
கோழிக் குஞ்சு

குக்குக்குக்கூ குக்குக்குக்கூ
குயிற் குஞ்சு
கூடு கட்டத் தெரிந்திடாத
குயிற் குஞ்சு

கா கா கா கா கா கா
காகக் குஞ்சு
கரைந்தழைத்து கூடி உண்ணும்
காகக் குஞ்சு

-நிதர்ஸன்

## அரவமும் முனிவனும்

ஒரு ஊரின் பாதை ஓரத்திலே பெரிய கறையான் பொந்து இருந்தது. அந்தப் பொந்துக்குள் நாகபாம்பு ஒன்று வசித்து வந்தது பாதையால் போவோர் வருவோரை நாகபாம்பு கடித்து வந்தது.

ஒரு முனிவர் வந்தார். அவரையும் நாகபாம்பு கடிக்க வந்தது முனிவர் ''பாம்பே! நீ கடிக்காதே'' என்று சொல்லிவிட்டுச் சென்றார்.

பாம்பு ஒருவரையும் கடிக்கவில்லை. அதனால் அவர்கள் கல்லால் எறிந்தார்கள். பாம்பின் முதுகெல்லாம் காயங்கள் ஏற்பட்டன.

அவ்வழியால் மீண்டும் அந்த முனிவர் வந்தார். பாம்பைக்கண்ட முனிவர் உன் முதுகெல்லாம் என்ன காயம்? என்றார், பாம்பு ''நீங்கள் கடிக்க வேண்டாமென்று சொன்னீர்கள் அதனால் நான் ஒருவரையும் கடிக்கவில்லை'' என்று சொன்னது.

அதற்கு முனிவர் ஒருவரையும் கடிக்க வேண்டாம்; கடிக்கிறமாதிரி சீறிப்பாய்'' என்றார் முனிவர் சொன்னபடி பாம்பு செய்து வந்தது அதனால் பாம்பை எவரும் நீண்ட வரவில்லை.

— சி. மாதுமை

சிறுவர் சிட்டி

# பஞ்சாமிர்தம் பலரச அமிர்தம்

## 96 மணி நேரம் பேசி உலக சாதனை

ஒலி பெருக்கியைக் கையில் வைத்துக் கொண்டு 96 மணித்தியாலங்கள் பேசி உலக சாதனை ஒன்றை ஏற்படுத்தியுள்ளார் 23வயது இளைஞர் ஒருவர்

றிச்சர்ட் பர்ட்டன் என்ற பெயருடைய இவர், ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்தவர். வானொலி வர்ணனையாளராகப் பணிபுரிகிறார்.

ஐரிஷ் நாட்டைச் சேர்ந்தவர் 76 மணித்தியாலங்கள் பேசி ஏற்படுத்திய சாதனையைத் தான் இவர் முறியடித்திருக்கிறார்.

பர்ட்டனின் பெயர் கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது.

## பொருத்தமான ஜோடி

மனிதன் விரும்புகின்றான்; கடவுள் அதை நிறைவேற்றுகிறார்

இது பழங் கதையாகி விட்டது.

கடவுள் செய்வதை இப்போது கம்பியூட்டர்கார் செய்யத் தொடங்கி உள்ளன.

துருக்கியில் வசிப்பவர் அநிலமா குரேசி

ஆறு வருட நீதிமன்றப் போராட்டத்தின் பின்னர் சுலைமான் தன் மனைவியை விவாகரத்துச் செய்தார். அதன் பின்னர் பொருத்தமான பெண் ஒருத்தியைக் கண்டுபிடிக்க கம்பியூட்டரின் துணையை நாடினார்.

2,000 மணப் பெண்களின் பெயர்கள் கம்பியூட்டருக்குக் கொடுக்கப்பட்டன அவற்றில் ஒன்று விவாகரத்துச் செய்யப்பட்ட மனைவியின் பெயர்.

கம்பியூட்டர் ஒரு பெண்ணின் பெயரைத் தெரிவு செய்து சுலைமானிடம் கொடுத்தது.

பெயரைப் பார்த்ததும் சுலைமான் அதிர்ச்சி அடைந்தார் விவாகரத்துச்செய்யப்பட்ட மனைவியின் பெயராக அது இருந்தது

சுலைமானுக்கு பொருத்தமான மனைவி விவாகரத்துச் செய்யப்பட்டவர்தான் என்பது கம்பியூட்டரின் கணிப்பு

மனைவி நெஸ்மின் சாக்லைாவுடன் மீண்டும் ஒரு முறை வாழ்ந்து பார்ப்போம் என்று சுலைமான் முடிவு செய்தார். ★

## மன்னனின் பொழுது போக்கு

பிரெஞ்சு மன்னனை மூன்றும் ஹென்றி விசித்திரமான பொழுது போக்குகளைக் கொண்டிருந்தான்

நாய்க்குட்டிகள் அடங்கிய சிறிய கூடையைக் கழுத்தில் அணிந்து நகர வீதிகளில் உலாவச் செல்வதில் அலாதிப் பிரியம் அவனுக்கு. ★

## கனடாவின் விலை ஒரு ரூபாய் தான்

முதலாம் ஜேம்ஸ் என்ற மன்னர் 1566ல் இருந்து 1625ஆம் ஆண்டு வரை கனடாவின் மன்னராக இருந்தவர்.

இவர் கனடாவை சேர் வில்லியம் அலெக்ஸாண்டர் என்பவருக்கு 1621ல் ஒரு ஸ்காட்டிஷ் பென்னி (ஒரு ரூபா) தொகைக்கு விற்றுவிட்டார். மிகக் குறைந்த விலைக்கு விற்பனை (ஒரு ரூபா) இதுதான். ★

## பாதுகாப்பை மீறிய நாய்

பெங்களூரில் சார்க் மாநாடு நடந்த சமயம் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டு இருந்தன.

''ஒரு குருவி'' கூட விமான நிலையத்திற்குச் செல்ல முடியாதபடி பாதுகாப்பு ஏற்பாடுகள்.

இவை எல்லாவற்றிற்கும் டிமிக்கி கொடுத்து விட்டு ஒரு நாய் விமான நிலையத்துள் நுழைந்தது.

அப்போது தான் வந்திறங்கிய விமானத்தின் அருகில் நாய் நின்றதை பாதுகாப்பு அதிகாரிகள் கண்டனர்

அவர்களினால்ஒன்றுமே செய்ய முடியாமற்போய் விட்டது

காரணம் வந்த விமானத்தில் இருந்து பங்களாதேஷ் ஜனாதிபதி எர்ஷாட் இறங்கிக் கொண்டு இருந்தார்! ★

## மதத்தின் பெயர் வெங்காய மதம்

பிரான்சில் புதிய மதம் ஒன்று தோன்றியுள்ளது

அந்த மதத்திற்கு வெங்காய மதம் எனப் பெயரிட்டுள்ளனர்

அந்த மதத்தினர் வெங்காயத்தைத் தெய்வமாக வழிபடுகின்றனர். வெங்காயத்தில் பெரிய தத்துவமே அடங்கி இருப்பதாக அவர்கள் கூறுகின்றார்கள்

அது என்ன தத்துவம் தெரியுமா?

வெங்காயத்தை உரித்தால் உள்ளே ஒன்றுமே இருக்காது வாழ்க்கை அதுபோலத் தானும்!!

## ஆடு வளர்க்கும் இராணுவம்

அமெரிக்க இராணுவத்தின் வெடிமருந்துப் பிரிவு பல ஆடுகளை மேய்ப்பதையுந் தமது அன்றாட அலுவல்களில் ஒன்றாக்கியுள்ளது.

வெடிமருந்துகள் நிரம்பிய நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலத்தில் அடர்த்தியாக வளர்ந்திருக்கும் புல்லை மேய்வதுதான் இந்த ஆடுகளின் வேலை.

ஆட்களை நியமித்தால் அவர்கள் வீசும் சிகரட் துண்டுகள் மூலம் வெடிமருந்து பற்றும் அபாயத்தைத் தயிர்க்கவும் கத்தரிக்கோலை பாவித்து புல்லை வெட்ட முற்பட்டால் அதன் பொறி மூலம் ஏற்படும் ஆபத்தைத் தடுக்கவுமே இந்த நடவடிக்கை!

## உலகில் உயர்ந்தவர்

பாக்தாத் நகரைச் சேர்ந்த காசிம் ஹூசேன் என்பவரே 1991 ல் உலகின் அதி உயர்ந்தவராக இருப்பார் என டாக்டர்கள் நம்புகின்றனர்.

16 வயதான இவரின் இன்றைய உயரம் 7 அடி 5 அங்குலம்.

## தேன் சேகரிக்க . . .

ஒரு றாத்தல் தேன் சேகரிக்க 40 லட்சம் பூக்களில் இருந்து தேன் பெறப்பட வேண்டும்.

தேனீக்கள் சுறுசுறுப்புடன் பணிபுரிவதால்தான் இது சாத்தியமாகிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டுக்கு ராஜா பிரேந்திரா; ஆனால், கலைக்கு அவர் அடிமை

நாட்டுக்கு ராஜா ஆனாலும் கலைக்கு அடிமை என்பதை நேபாள மன்னர் பிரேந்திரா நிரூபித்திருக்கிறார்.

'ஜந அரண்யோ காத மண்டுட்டே' என்ற மர்ம நாவலை சத்யஜித் ரே எழுதியிருக்கிறார்

பிரபலமான இந்த நாவலை திரைப்படமாகத் தயாரிக்க சத்யஜித் ரேயின் மகன் சந்திப்ரே விரும்பினார்

நேபாளத்தின் தலைநகரமான காட்மண்டு சென்று படம் பிடிக்க வேண்டிய இடங்களையும் தெரிவு செய்து கொண்டு வந்தார் சந்திப் ரே.

ஆனால் அந்த இடங்களில் படம் பிடிக்க நேபாள அதிகாரிகள் அனுமதி அளிக்க மறுத்து விட்டனர்.

அந்த மர்ம நாவலின் படி காட்மண்டுவில் இடம் பெற்ற கள்ளக் கடத்தல் மோசடி கண்டு பிடிக்கப்படுகிறது.

இதைத் தொடர்ந்து சந்திப் ரே படம் எடுக்கும் முயற்சியைக் கைவிட்டார். அந்த நேரம் பார்த்து "ஹிந்துஸ்தான் தொம்ஸன்" நிறுவனம் சத்யஜித் ரே படங்களை தூரதர்ஷனுக்காகத் தயாரிக்க முன் வந்தது.

உடனே சந்திப் ரே தனது முன்னைய எண்ணத்தை வெளியிட்டார். உடனே தந்தை சத்யஜித் ரே நேபாள மன்னருக்கு கடிதம் ஒன்றை எழுதினார்.

உடனே ரே தம்பதிகளை காட்மண்டு வரும்படி நேபாள மன்னர் அழைத்தார்.

சத்யஜித் ரே தம்பதிகளுடன் சந்திப் ரேயும் காட்மண்டு சென்று மன்னர் அளித்த பகல் விருந்தில் கலந்து கொண்டனர்.

சத்யஜித் ரேயின் மர்மக்கதையை காட்மண்டுவில் படமாக்க மன்னர் அனுமதியும் வழங்கினார்.

படப்பிடிப்பு வேலைகள் அடுத்த மாதம் தொடங்குகிறது. அடுத்த ஆண்டு மார்ச் - ஏப்ரலில் இப்படம் தூரதர்ஷனில் ஒளிபரப்பப்படும்.

## விரைவில் கிடைக்கும் "இனி ஒரு சுதந்திரம்"

மணிவண்ணனின் கலைக்கோயில் பட நிறுவனம் வழங்கவிருக்கும் படம் 'இனி ஒரு சுதந்திரம்'.

மக்களோடு ஒன்றியுள்ள சமுதாயப் பிரச்சினையைப் புதியகோணத்தில் இப்படத்தின் மூலம் அளிக்கிறார் டைரக்டர் மணிவண்ணன்.

இப்படத்தில் வித்தியாசமான வேடத்தில் சிவகுமார் நடிக்கிறார்.

சந்திரசேகர் 'கடலோரக் கவிதைகள்' ராஜா, சிவச்சந்திரன், ஜனகராஜ், செந்தில், வினு சக்கரவர்த்தி, எஸ்.எஸ். சந்திரன், ரேகா, சுஜாதா, சாந்திமதி ஆகியோர் இதில் பங்கேற்று நடிக்கிறார்கள்.

திருப்பூர் என். வெங்கடாசலம் இப்படத்தைத் தயாரிக்க, கதை, திரைக்கதை, வசனம் டைரக்‌ஷனை மணிவண்ணன் கவனிக்கிறார்.

● தயாரிப்பு: பேரின்பம் ●

## இரட்டை வேடத்தில் விஜயகாந்த் நடிக்கிறார்

விஜயகாந்த் — ஆபாவாணன் இருவரும் இணைந்து ராவுத்தர் பிலிம்ஸின் சார்பில் உருவாக இருக்கும் படம் 'உழவன் மகன்'.

இதில் விஜயகாந்த் இரட்டை வேடத்தில் நடிக்கிறார். மற்ற நடிகர், நடிகைகள் தேர்வு நடந்து வருகிறது

கதை திரைக்கதை வசனம், பாடல்களை ஆபாவாணன் எழுத மனோஜ்—கியான் இசை அமைக்கிறார்கள்

ரமேஷ்குமார் ஒளிப்பதிவுசெய்ய, ஆர். அரவிந்தராஜ் டைரக்‌ஷன் பொறுப்பை ஏற்று இருக்கிறார்

மிகக் குறுகிய காலத் தயாரிப்பாக இது இருக்கும் என டைரக்டர் அரவிந்தராஜ் தெரிவிக்கிறார்.



## ரகசியத் திருமணம்; பபிதா மறுக்கிறார்

'பபிதா ரகசியமாகத் திருமணம் செய்து கொண்டுவிட்டார்' —இப்படி ஒரு வதந்தி தமிழ்ப்படவுலக வட்டாரங்களில் அடிபட்டது.

இதை முற்றாக மறுத்துள்ளார் பபிதா.

அதுபற்றி பபிதா இப்படிக் கூறுகிறார்;

"என்னிடம் டிரைவராக ஒருவர் வேலை செய்து வந்தார். அவரின் நடவடிக்கைகள் எங்களுக்குப் பிடிக்காததால் அவரை வேலையில் இருந்து விலக்கிவிட்டோம்.

அதிலிருந்து அந்த நபர் இப்படி ஒரு வதந்தியைக் கிளப்பிவிட்டுக் கொண்டு இருக்கிறார்.

எனக்கு இருபத்தைந்து வயதான பிறகுதான் திருமணம் நடக்கும்.

இதற்கிடையில் திருமணம் என்ற பேச்சுக்கே இடமில்லை" என்றார்.




# அன்போடிணைந்த காதல் வாழ்விற்குப் பண்போடிணைந்த பெண்ணின் பணி!

'கவர்ச்சி' மனுக்குலத்தை இழுப்பது இயற்கை எதிர்பாலாரினரை தன்பக்கம் இழுக்கக்கூடியவளே இந்த உலகத்தைப் புரிந்து கொண்டவளாகின்றாள்! என்கிறார் ஒரு மேற்தலை அறிஞர்.

எனினும் 'காதல்' என்றபதம் தனிக் கவர்ச்சியினையும், உணர்வுகளையும் மாத்திரம் உள்ளடக்காது அன்பினையும் அதனோடிணைந்த வாழ்க்கை முறையினையுமே வெளிப்படுத்துகின்றது.

ஒரு பெண் தன்மீது கவர்ச்சியினையும், அன்பினையும் ஏற்படுத்திக் கொள்வது எப்படி? அந்த அன்போடிணைந்த காதல் வாழ்வை நிலை நிறுத்திக் கொள்வது எப்படி? என்ற வினாவுக்கு தன்னை விடையாக்கிக் கொண்டால் இல்லத்தில் ஏற்படும் பிரச்சினைகள் பெருமளவு தீர்வழி ஏற்படும்.

ஒரு பெண் தான் விரும்பிய காதலனுடனோ அல்லது கணவனுடனோ நிரந்தர இன்பமுடன் வாழ அவள் தன்னைப் பற்பல வழிகளில் நெறிப்படுத்திக் கொள்ள வேண்டும். இதன் கருத்து என்னவெனில் தனக்கு உரியவரை மற்ற எல்லாவற்றிலும் முக்கியமானதாகக் கருதவேண்டும்

மற்ற மனிதர்களை விட மாத்திரமல்ல, தன்னை விடவும் உயர்ந்தவராக மனதில் நிலைநிறுத்திக் கொள்ள வேண்டும்.

தன் காதலனுக்கு எப்படிப்பட்ட பொருள்களில் நாட்டம் அதிகம்? எப்படிப்பட்ட பொழுது போக்குகளில் விருப்பம்? என்பதை சரிவர அறிய வேண்டும் உதாரணமாக சிலருக்கு வாகனங்கள் ஓடுதல் ஒரு முக்கியமான

**நங்கை**

பொழுது போக்காயிருக்கலாம். அடுத்து உடைகள், வீட்டு அலங்காரங்கள் எனப் பல்வேறு விடயங்களையும் உற்று அவதானித்தல் நன்று

கணவன் ஏதாவது ஆதரவு கேட்டால் தன் தாய் தந்தையரையோ, வேறு உறவினர்களையோ, அல்லது பிள்ளைகளையோ சாட்டாகக் கூறி விலகிக் கொள்ளக் கூடாது. தன் மனைவி மிக உயர்ந்த அன்பான இடத்திலேயே தன்னை வைத்திருக்கிறாள் என்ற உணர்வை கணவன் மனதில் பூரண விளக்காக ஏற்றி வைக்க வேண்டும்.

இந்த உலகில் தன் இல்லத்தாளை தவிர எந்த ஒரு பொருள்மீதும் தீவிர சிந்தனை இல்லா நிலைபெற வேண்டும்.

### இன்முகம் காட்டி

கணவன் வீட்டிற்கு வந்தவுடன் இன்முகம் காட்டி வரவேற்கக்கூடிய மனைவியையே விரும்புவான். அதுவேளை கணவன்மாரும் கூடவளைந்து கொடுக்கும் தன்மையில் வாழ முற்படின் இடையூறுகளைத் தவிர்க்க முடிகின்றது.

ஒருவரில் ஒருவர் தங்கியே இருக்கின்றனர் என்பதை உணர்ந்து கொள்ளக்கூடியதாக இருவருமே நடந்து கொள்வது அவசியம்.

தனக்கு தகுதி வாய்ந்த, பெருமை தரக்கூடிய மனைவி கிடைத்திருப்பதாக கணவன் பெருமிதம் கொள்ள வைக்கவேண்டும். முதலில் இதற்கு பொருத்தமான உடைகளைத் தெரிந்து, ஒத்த நிறங்களைச் சிபாரிசு செய்து அணிவிக்கவேண்டும்.

நாலுபேர் முன்னிலையில், அல்லது அலுவலகத்தில் தன் மிடுக்கான நிலையை உணரும்போது அவனுக்கு மனைவியின் நினைவு வராமல் போகாது.

அத்துடன் அவன் மேல் இருக்கும் அன்பும் அதிகரிக்கும் கணவனுக்காக செய்யும் எந்த சேவையும், ஈற்றில் தனக்கே தான் பெருமை தரும் என்பதை பல பெண்கள் உணரத் தவறிவிடுகிறார்கள்.

அன்பான மனைவி தன் உள்ளக் கிடக்கைகளை சாதுரியமாகவே கணவனுக்குச் சொல்ல வேண்டும். கோபம் தோன்றுவது இயற்கை ... வந்தால் வெடித்துக் கொட்டக்கூடாது. தன் கணவனிடம் குற்றம் கண்டால், தொடரான தொந்தரவோ, நச்சரிப்போ கூடாது. தந்திரமாகத் தவறைச் சுட்டிக் காட்டி திருத்த வைக்க வேண்டும். மன்னித்துத் தான் திருத்தமுடியும். எதையுமே ஆரம்பத்தில் முறியடித்துவிட வேண்டும்.

அவள் ஒரு போதும் பாலுணர்வை தண்டனைக் கருவியாக உபயோகிக்க முற்படக்கூடாது அது கணவனிடமிருந்து பெறும் பெறுமதியான பரிசு என்பதை மறக்கக் கூடாது!

### மந்திரியாய்...

பிரச்சினைகளுக்கு தீர்வு காணும்போது கணவனின் பொறுப்பு வாய்ந்த மந்திரிபோல செயற்பட வேண்டும் சில முக்கிய பிரச்சினைகளில் "அவர் ஏதோ பட்டிமுத்துப் பார்ப்பார் தானே!" என்று சில பெண்கள் கூறுவதை அவதானித்திருக்கலாம். அந்த நிலைக்கு எந்தப் பெண்ணும் விடக்கூடாது. ஆனால் ஆலோசனைகளை வழங்கிவிட்டு 'உங்களுக்கு விருப்பம் என்றால் எனக்கும் விருப்பம் தானே' என்றோ அல்லது உங்களுக்கு விருப்பமில்லை என்றால் எனக்கும் அப்படித்தானே!' என்று அவரையே முதல்வராகக் கருதவேண்டும்.


கணவனின் மனம் அறிந்து, நேரம், காலம், குறிப்பறிந்து பெண்கள் நடக்கவேண்டும். அப்போதுதான் குடும்பத்தில் மகிழ்ச்சியும் குதூகலமும் நிலவும், இன்ப வாழ்வு மலரும்.

அனேகமான குடும்பங்களின் அன்பான தாம்பத்தியத்தைப் பிரிக்கும் பொருளாக சந்தேகம் விளையாடுகின்றது, இந்த வியாதி பீடித்துக்கொண்டால் 'வாழ்க்கை' என்ற சொல்லுக்கே அர்த்தமின்றிப் போய் விடுகின்றது. இதனுடன் பிடிவாதமும், பேராசையும் புகுந்து விட்டால் வாழ்வு சாம்பல் மேட்டில் தான். இவற்றை விரட்டப் பழகவேண்டும். ★

கே. எஸ். ஞானமூர்த்தி

## சொற்சிலம்பம்

**போட்டி இல. 46**



அனுப்புபவர் பெயர்:-

திரு/திருமதி/செல்வன்/செல்வி ..................

வயது ..................

விலாசம் ..................

ஒப்பம் ..................

### போட்டி விதிகள்

சொற்சிலம்பம் போட்டி விதிகள் ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்தில் வெளியாகும்

**இடமிருந்து வலம்**

1. சுகவாழ்விற்கு அத்தியாவசியமானது
5. வணங்கு
7. தித்திப்பு
8. குருவை இப்படியும் சொல்வது உண்டு
9. வாசகை குழம்பியுள்ளது.
11. சிறுவருக்குப் பிரியமானது
12. இந்தியாவில் பிரபலமான ஒரு நதி
13. ராமன் நாமம்
14. அரிச்சந்திரனின் மகன் பெயர் முடியவில்லை
15. அரசன்
16. நெருப்பு
18. கீரை வகைகளில் ஒன்று
20. இதனைப் பேணிப் பாதுகாத்து வைக்க பலநாடுகளில் நவீன கூடங்கள் உண்டு
22. ஆந்திர மாநிலத்தில் உள்ள பிரசித்தி பெற்ற வெங்கடேஸ்வரர் ஆலயம் இந்த இடத்தில் தான் உண்டு.

**மேலிருந்து கீழ்**

1. மாங்கல்யம் தரித்திருப்பவள்
2. மனிதனின் அவயவங்களில் ஒன்று
3. நட்சத்திரம்
4. அழகு
5. ஸ்ரீலங்காவின் வதை முகாம்களில் ஒன்று
6. ஆரோக்கியத்திற்கு இதுவும் நல்லதொரு 'டானிக்'
8. போசனை குழம்பி விட்டது
10. ......கொம்பு இது திருச்சிமாவட்டத்தில் 3 நதிகள் சந்திக்கும் இடம்
13. சிறு பெண் பிள்ளைகளை இப்படிச் செல்லமாக அழைப்பர்
15. மெட்டு 'ம்' இன்றிக் கெட்டு நிற்கிறது.
16. எரிப்பது
17. மாதங்களில் ஒன்று
18. கடலில் தோன்றி மறைவது
19. செல்வம்
20. காரியங்கள் ஆரம்பிக்க ஏற்றவேளை
21. சேறு

**சொற்சிலம்பம் இல. 44 விடைகள்**

**மேலிருந்து கீழ்**

1. பராசக்தி, 2 ரத்தி 3. மதி, 4 கரி, 5. சுயாட்சி, 7. ஆதி. 9. சனம், 10 மாடி, 11 ஏகலைவன். 12. மாரி, 14. யானை, 15 நங்கூர, 18. யசோதை, 19. நபி,

**இடமிருந்து வலம்**

1. பரமகதி, 6 ராத்திரி, 7 ஆசியா, 8 சதி, 9. சமாதி, 11. ஏனடி, 12. மாசி, 13. தியாகம், 15. நரி, 16. கைலை, 17. பாங், 20. வசை, 21. பிரான், 22. சிரத்தை.

**சொற்சிலம்பம் இல. 44 பரிசு பெற்றவர்கள் விவரம்**

முதலாம் பரிசு:- செல்வி. த. சிறிரஞ்சனிதேவி, குடாரப்பு, நாகர் கோவில்.

இரண்டாம் பரிசு:- செல்வன் பி. ஜோர்ஜ் சுரேஷ் குமார், ஸ்கந்தவரோதயா கல்லூரி, சுன்னாகம்.

மூன்றும் பரிசு:- திரு. கே அரசேஸ்வரன், கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

★ பரிசு பெற்றவர்களுக்கு உரிய பணம் காசோலை மூலம் அனுப்பி வைக்கப்படும் நேரில் எவரும் வரவேண்டியதில்லை

## பாடம் படிப்பிக்கும் - - -

(4-ம் பக்கத் தொடர்ச்சி) லமைப்பில் உள்நாட்டு விவகாரங்களை கல்வி முதலாக ஏழு நிர்வாக சபைகளிடம் ஒப்புவிக்கவும், நிர்வாகக் குழுவினரின் தனித் தனித் தலைவர்கள் மந்திரிமார் என அமர்ந்து அரச காரியஞ் செய்யவும் சாத்தியக் கூறுகள் சாதகமாக அமையும் சூழ்நிலை உருவாயிற்று.

இலங்கை கல்வித் திணைக்களம் 1869 ஆம் ஆண்டில் உருவாகி, 1969 ஆம் ஆண்டில் "சிவசு" என்னும் நூற்றாண்டு விழாவையும் கண்டது. அந்தக் கல்வித் திணைக்களத்தின் பணிப்பாளர்கள் காலந்தோறும் தங்கள் பரிபாலன அறிக்கைகளைத் தயாரித்து வெளியிடும் வகையில் 1928 ஆம் ஆண்டிலும் பணிப்பாளர் தமது அறிக்கையை வெளியிட்டார்.

### தமிழ் ஆசிரியர் பற்றாக்குறை

அதில் அவர் குறிப்பிட்ட வாசகம் ஒன்று இங்கே நினைவிற் கொள்ளத்தக்கதாகிறது. "வளர்ந்து வந்த பாடசாலைப் பெருக்கத்தைச் சமையப் பெருகி வந்த பிள்ளைகளுக்கு ஏற்ற முறையில் கல்வி கற்பிப்பதற்குத் தமிழாசிரியரின் எண்ணிக்கை பற்றாக் குறையாயிருக்கிறது."

இங்ஙனம் குறிப்பிட்ட பணிப்பாளர் தமது அறிக்கையில் மேலும் புள்ளிவிபரத்தோடு குறிப்பிட்டிருப்பதாவது. 1928 ஆம் ஆண்டில் கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலையில் பயிற்சி பெற்றவராய ஆண்கள் தொகை 38. உதவி நன்கொடை பெற்ற பயிற்சிக் கலாசாலையிற் பயிற்றப்பெற்ற ஆண்கள் தொகை 28, பெண்கள் தொகை 29. இவர்களைவிட ஆசிரிய தராதரப் பத்திரம் பெற்றவர்கள் 22 ஆண்கள், 3 பெண்கள்.

இலங்கையில் 1927 ஆம் ஆண்டிலும் பார்க்க 1928 ஆம் ஆண்டில் 119 பாடசாலைகள் அதிகரித்திருந்தன. இன்னும் படிக்கவந்த பிள்ளைகள் தொகையில் ஆண்கள் தொகை 6866 ஆகவும், பெண்கள் தொகை 7385 ஆகவும் அதிகரித்திருந்தன.

இத்தனைய அதிகரிப்பு வடமாநிலத்தில் குறிப்பிடத்தக்க அளவில் உயர்ந்திருந்தது வடமாநிலத்தில் பாடசாலைகள் அதிகரித்தமைக்கு காரணம் சைவவித்தியா விருத்திச்சங்கமேதான்.

சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தின் பெரும் பொறுப்புக்களை சேர். இராமநாதன் அவர்கள் தமது முதுமைத் தளர்ச்சி காரணமாகக் கௌரவ சு. இராசரத்தினம் அவர்களிடமே ஒப்படைத்திருந்தார் இராசரத்தினம் அவர்கள் தமது நிர்வாக சபை, இயக்குநர்சபை முதலானோரின் ஒத்துழைப்புப் பலங்கொண்டு, பிரதேசத்தின் பெரியவர்கள், தனவந்தர்களின் உபகரிப்பு, நன்கொடை மூலம் பலபாடசாலைகளை அமைத்து வந்தார்.

இங்ஙனம் அமைக்கப் பெற்ற பாடசாலைகள் யாவும் சைவத்தின் இரண்டாங்கண் எனப் பண்டிதமணி அவர்கள் போற்றிய மகான் காரைதீவு சங்கரப்பிள்ளை அருணாசலம் அவர்களுக்கு ஆங்காங்கே அமைந்த நினைவுச் சின்னமென நிலவிச் சைவத்தமிழ்ப் பாரம்பரியத்தை வளர்த்து வந்தன என்று கலாசாலைப் புராணமுடையார் வாழ்த்துக் கூறியுள்ளார்.

"சைவர்களின் ஆதரவும் பெருநிதியும்
அரசினர்தம் சார்புங்கொண்டு
மைவளரும் கண்டத்தான் சமயநெறி
வளர்ந்தோங்க மாசில் பள்ளி
மெய்வகையிற் பன்னூறு நிறுவினனும்
நாடெங்கும் மெய்ம்மையுள்ளச்
சைவனருணாசலனை ...
தமிழ்போல ..."

(வளரும்)

## நிழலும் நிஜமும்---

5ம் பக்கத் தொடர்ச்சி) புரியவில்லை.

திடீரென்று ஏதோ ஒரு பெரும் பொறுப்பு என் தலையில் சுமத்தப் பட்டு விட்டதுபோல ஒரு உணர்வு ஏற்படுகிறது. மௌனமாக எழுந்துபோய் கூடத்தில் இருட்டில் அமர்ந்து கொள்கிறேன். கொஞ்ச நாளாய் இருட்டில் உட்கார்ந்திருப்பதில் எனக்கு ஒரு நிம்மதி. வெளிச்சத்தைக் கண்டால் மனதில் ஒரு பயம் தோன்றுவது போன்ற உணர்வு.

ஏனோ எனக்குத் தெரியவில்லை? யாரோ கதவைத் தட்டும் சத்தம் கேட்டுத் திடுக்கிட்டு எழுகிறேன் இவ்வளவு நேரமும் கண்ணை விழித்துக் கொண்டே கனவு கண்டேனா? அல்லது சிந்தித்தேனா? ஒன்றுமே புலப்படவில்லை அப்படியென்றால்...

உயிருள்ள மனிதனின் மூளை இயங்கும்போது சிந்தனை இல்லாதிருக்காதாம். சிலவேளை என் மூளை ... செய ... தொழிற்படாது நின்று விடுகின்றதோ?

அம்மாவும், அப்பாவும் கோவிலிலிருந்து வந்து கதவைத் தட்டுகிறார்கள். நான் ஏதோ பைத்தியக்காரிபோல சிந்தனையில் மூழ்கியிருக்கிறேனே என்று எண்ணிக் கொண்டு எழுந்து சென்று கதவைத் திறக்கிறேன்.

நான் எதிர்பார்த்து வந்தது போல் வந்தது அப்பாவும் அம்மாவும் அல்ல, தேவன்தான் அசட்டுச் சிரிப்போடு நிற்கிறான். ஒரு கணம் தயங்கினாலும் சமாளித்துக்கொண்டு

'உள்ளே வாவேன் தேவன்!' என்கிறேன். உள்ளே வந்து அமர்கிறான் தேவன்.

'ஏது இந்த நேரத்திலே வந்திருக்கிறாய்? என்ன விசேஷம்? என்கிறேன்

பதிலுக்கு ஒரு அசட்டுச் சிரிப்பு'

'பொழுது போகவில்லை. அதுதான் சும்மா இந்தப் பக்கம் வந்தேன்' என்கிறான் தேவன்.

(வளரும்)

## பயங்கர மனிதன்---

(4-ம் பக்கத் தொடர்ச்சி) அப்படி யாருமில்லை... நானும் அவதானமாகக் கண்காணித்துத்தான் வருகிறேன்... நெடுந்தீவிலிருந்த பறங்கியர் அனைவரும் நேற்றுக் கள்ளிக் கோட்டைக்குப் புறப்பட்டுவிட்டார்கள்... போயே விட்டார்கள்...

மன்னன்: அவர்கள் போனாலும் திரும்பி வரலாம் எதிலும் நீர் விழிப்பாகவிருக்க வேண்டும்...

வன்னி: வேந்தே! தங்கள் சித்தம் என் பாக்கியம்......

(மன்னன் அங்கிருந்து புறப்பட்டு அரண்மனைக்குச் செல்ல, காக்கைவன்னியன் திருட்டு விழி விழித்தவாறு மந்திரியின் மாளிகைக்குச் செல்கிறான்)

(வளரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தரமான சிமெந்து உற்பத்திக்கு ஆதாரமாக அமையும் உமி!

## வடக்கில் ஆலை அமைக்கலாமே?

இலங்கையின் சீமெந்து உற்பத்தி 1958 ம் ஆண்டு 'சுழலும் சூளை' (Rotary Kiln) அமைப்பில் ஏற்படுத்தப்பட்டது. மேற்படி தொழில் நுட்பத்தைக் கொண்ட ஆனால் எரிபொருளில் மாற்றம் (Coal) செய்யப்பட்டு இன்றைய ஆலைகள் இயங்குகின்றன.

தற்போதைய நாளொன்றுக்கான மொத்த உற்பத்தி (திருகோணமலை - பப்பான் இரண்டு புதிய தொழிற்சாலை உற்பத்தியை விட) 3000 மெற்றிக் தொன்களாகும். ஆனால் இத்தொழிற்சாலைகள் தமது உற்பத்தி இலக்கை முற்றாக அடையவில்லை. இவற்றுக்குப் பல காரணங்கள் உண்டு முக்கியமாக, தொழில்நுட்ப, நிர்வாகக் காரணங்களாகும். உற்பத்தி, நிர்வாகச் செலவுகள் அதிகரித்து 50 கி.கி கொண்ட பைக்கட் ஒன்றின் சந்தை விலை தற்போது 110 ரூபாவாகும். ஆனால் உண்மையாக 50 கி.கி கொண்ட ஒரு பைக்கட்டின் முடிவு உற்பத்தி விலை ரூ. 41/50 மாத்திரமே. தொழில் நுட்ப, நிர்வாகச் சீர்கேடுகளின் விளைவே மேற்படி சந்தை விலையாகும். காங்கேசன்துறைத் தொழிற்சாலைக்குத் தேவையான சுண்ணாம்பு, தொழிற்சாலையின் சூழலிலிருந்தே பெறப்பட்டு வருகின்றது. 'இலங்கைப் புவிசார்வியல் திணைக்களம்'' காங்கேசன்துறைச் சுண்ணாம்புப் படிவங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியின் முடிவின்படி சுண்ணாம்பு படிவம் தற்போதைய சீமெந்து உற்பத்தி விகிதாசாரப்படி 10 தொடக்கம் 15 வருடங்களுக்கு மட்டுமே போதுமானது என மதிப்பிட்டுள்ளது.

எனவே புதிய சுண்ணாம்பு வளங்களை தொழில்நுட்ப ரீதியாக பயன்படுத்துவதற்குரிய புதிய சூளை அமைப்பு களை வடிவமைக்க வேண்டும். குறைந்த நீள சுழலும் சூளையில் நான்கு நிலை சைக்கிளோன் (4 - Step Cyclone) பாவித்து சாம்பல வீதம் அதி வெட்டிலும் அதிகமுள்ள நிலக்கரி (Coal) நன்றாக அரைக்கப்பட்டு சுண்ணாம்பு களி மூலப்பொருளுடன் சேர்த்து சூளையிலிட்டு 'உயர் காலல்' (High Emmissivity) திறனுள்ள சுவாலையினால் வெப்பம் கொடுக்கப்பட்டு சிறந்த போட்லண்ட் சீமெந்து தயாரிக்கப்படுகின்றது.

இங்கு 1 கி.கி கிளிங்கருக்கு 725 கிலோ கலோரிகள் வெப்பம் தேவைப்படுகின்றது. மேற்படி சூளையின் 'வெப்பக் கிளர்த்திறன்' 70 வீதம் ஆகவும் 'வெப்ப இடமாற்றக் குணகம் Heat Transfer Co-efficient)' 350W/m2 பாகை செல்சியஸ் ஆகும். இந்தச் சூளையில் சுண்ணாம்பின் வெப்பக் கூட்டுப் பிரிகை'' (Thermal Dissociation) சூளைக்கு வெளியே வைத்து கிளிங்கரிலிருந்து உறிஞ்சிய சுயாதீன வெப்பத்தினால் (Pre-Heat) சுண்ணாம்பைப் பிரிகையடையச் செய்வதனால் சீமெந்தின் கிளிங்கர் உற்பத்தியை அதிகரிக்கமுடியும். இச் சூளையில் ஒரு தொன் சீமெந்து உற்பத்திக்கு 100 அலகுகள் மின்வலுவும், ஒரு தொன் கிளிங்கருக்கு 760 கிலோ கலோரிகள் வெப்பமும் தேவைப்படுகின்றது. இதனால் நாளொன்றுக்கான உற்பத்தி 4000 தொன்னிலிருந்து 10,000 தொன்னாக அதிகரிப்பதுடன் சூளையின் பருமனும் குறைக்கப்பட்டு அதன் பொருத்தும் செலவும் 5 வீதம் தொடக்கம் 10 வீதம் வரை குறைக்கப்படுகின்றது.

ஐரோப்பிய சூளையமைப்பை பயன்படுத்தினால் சூளையிலிருந்து வெளியேறும் தூசி நிலக்கரித்தூளுடன் கலந்து எரிக்கப்படுவதால் 8%

> ஆய்வுநிறுவனம் நடத்திய எமது பிரதேச தொழிற்துறை வளங்களும் எதிர்காலமும் என்ற கருத்தரங்கில் ஆற்றப்பட்ட உரையின் தொகுப்பு இது.

> **கைத்தொழில் வளம்**

எரிபொருள் சேமிக்கப்படுவதுடன், சீமெந்து தூசினால் சூழல் மாசடைதலும் நீக்கப்படுகின்றது.

சீமெந்தின் தரத்தை அதிகரிப்பதற்கு 80% இலும் குறைந்த கல்சியம் காபனேட்டை அல்லது 40% தொடக்கம் 44% கல்சியம் ஒக்சைட்டைக் கொண்ட சுண்ணாம்பைப் பயன்படுத்த வேண்டும். உதாரணமாக உருக்கு ஆலைக்கழிவு (Steel Factory slag), டொலமைட் (Dolomite), கடலிலுள்ள CaCo3 சிப்பிகள் போன்றவைகளையும் பயன்படுத்தக்கூடிய கூம்பு வடிவ சுண்ணாம்பு பிரிகை வலையத்தைக் கொண்ட நிலைக்குத்தாகச் சுழலும் அச்சைச் (Vertical Shaft Kiln V S K) கொண்ட சூளை அமைக்கப்பட வேண்டும். இதனால் நாளொன்றுக்கு 50 மெ. தொன் சீமெந்து உற்பத்தியைக் கொடுக்கும் தொழிற்சாலை நிறுவுவதற்கு 20 இலட்சம் மூலதனம் தேவை. இத் தொழிற்சாலையின் மூலம் பெறப்படும் 50 கி.கி. சீமெந்துப் பைக்கட் ஒன்றை 50 ரூபாவுக்கு விற்பதனால் மாதமொன்றுக்கு ரூ 5,20,000/- நிகர லாபம் பெறலாம். இவ்வித தொழிற்சாலை வடமாகாணத்தில் நிறுவப்படுவதனால் வேலைவாய்ப்பை பெறுவதுடன் உள்நாட்டுத் தேவையையும் பூர்த்தி செய்யலாம்.

### உமிச் சீமெந்து

வடபகுதியில் நெல் உமி பெருமளவு கழிவுப் பொருளாகக் கிடைக்கின்றது. இவ்வுமியை எரித்துக் கிடைக்கும் சாம்பலை நன்றாக அரைத்து நுண்தூளாக்கி (170 Mesh No Sieve) சுண்ணாம்புடன் சேர்த்து 500 0 C வெப்பமேற்றி கிளிங்கர் தயாரித்து, இதற்கு குறிப்பிட்ட வீத ஜிப்ஸம் சேர்த்து நன்றாக நுண்தூளாக அரைத்துச் செய்த சீமெந்தைக் கிராமப்புறத்தில் செலவு குறைந்த வீடுகளை அமைப்பதற்குப் பயன்படுத்தலாம் இதற்கான, நாளொன்றுக்கு 24 மெ. தொன் கொடுக்கும் ஆலை ஒன்றை வடபகுதியில் அமைத்தால் சிறந்த இலாபத்தை அடையலாம்.

### சோடியம் சிலிக்கேற்று

நெல் உமிச்சாம்பலில் சோடியம் சிலிக்கேற்று காணப்படுகின்றது. இதைச் சில இரசாயன முறைகளைக் கையாள்வதனால் சோடியம் சிலிக்கேற்றைப் பிரித்து எடுக்கலாம். ✶

**வ. சி. இராசரத்தினம்**




---

மா ஞ வாரியாக செய்கை பண்ணப்படும் உழுந்துப் பயிரை அக்ரியஸ் கொன்வொல்வியூலி (வி) அல்லது (Agrius Convolvuli) ஹேர்ஸ் கொன்வொல்வியூலி (Herse Convol--vuli) எனும் புழு தாக்கி விளைவில் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது இப் புழுவின் தாக்கம் முதல் முதல் இலங்கையில் அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் பின்பு வவுனியா மாவட்டத்திலும் கூடுதலான சேதத்தை ஏற்படுத்தின.

இதன் வாழ்க்கை வட்டம் முட்டை, குடம்பி, கூண்டுப்புழு அந்து ஆகிய பருவங்களால் ஆனது. இதன் முதிர்ப்பருவம் ஓர் அந்து 45-50 மி.மீ. நீளமுடையது இறக்கை விரிந்து இருக்கும் நிலையில் இதன் தூரம் 83-100 மி. மீ அந்து பெரிய உருவத்தை உடையதால் சில சமயங்களில் அது பறந்து திரியும் வேளைகளில் இதனை ஓர் சிறிய பறவை என எண்ணத் தோன்றும். இதன் இறக்கைகள் கடும் சாம்பர் நிறமானவை.

அந்தின் வயிற்றுப் பகுதியில் கறுப்பு நிற வரியும், மென் சிவப்பு வளையங்கள் காணப்படும். இவ்வந்து இலகுவில் ஒளியினால் கவரக் கூடியது. கூடுதலாக உள்ள இடங்களில் வீடுகளில் மாலையில் விளக்கு ஏற்றும் வேளையில் வீடுகளைச் சுற்றிப் பறந்து திரிவதை அவதானிக்கலாம்.

முட்டை சுமார் 1மி மீ. பருமனுடையது, தனித் தனியாக தாவரத்தின் எப்பகுதியிலும் அந்தினால் இடப்படலாம். 5 – 8 நாட்களில் இவை பொரித்து குடம்பி (புழு) வெளி வருகின்றன. முழுவளர்ச்சி அடைந்த குடம்பி 120-150 மி மீ. நீளமும் 14 மி. மீ. அகல

> **கமமும் புலமும்**

மும் உடையது. அதன் உடலில் மயிர்கள் இல்லாது அழுத்தமாகக் காணப்படும். இதன் நிறம் மாறுபாடு அடையக் கூடியது

சில சமயங்களில் இதன் உடல் பச்சையாகவும், அதன் மீது சாய்வான திசையில் கருமையான ஓரத்தையுடைய மஞ்சல் அல்லது மென் சிவப்பு கோடுகள் காணப்படலாம் அல்லது உடல் கபிலநிறமாகவும், அதன் பக்கங்களில தெளிவற்ற செங்கபிலநிறப் புள்ளிகளும் காணப்படலாம் குடம்பியின் 8 ம் வயிற்றுத் துண்டத்திலிருந்து மேல் நோக்கி கொம்பு போல் வளைந்து ஓர் அமைப்பு காணப்படும். இதனால் இதை கொம்புப் புழு என்பர் குடம்பி (புழு) க்காலம் 3 - 4 கிழமைகள். முழு வளர்ச்சியடைந்த குடம்பி நிலத்தினுள் கூண்டுப்புழுவாகக் காலத்தைக் கழிக்கும். கூண்டுப்புழு கடும் கபில நிறமானது. இதன் காலம் 17-26 நாட்கள்.

உழுந்துப் பயிரில் அழிவை ஏற்படுத்துவது குடம்பிப் பருவம் ஆகும். இதன் தாக்கம் இலைகளை அரித்து உண்பதனால் பச்சயம் அற்று விடுகின்றது. இதனால் வளர்ச்சியும், விளைச்சலும் பாதிக்கப்படுகின்றன. இக் குடம்பி உருவத்தில் பெரியதான படியால் ஓர் இரவில் ஒரு சில குடம்பிகள் பெரும் அளவில் உண்ணக் கூடியன. தாக்கப்பட்ட பயிர்கள் மொட்டையாகக் காட்சியளிக்கும். அதன் அடியில் உண்ணப்பட்ட எச்சங்கள் காணப்படும். இப் புழு இரவு நேரங்களில் பயிரைக் கூடுதலாக உண்ணும். வெயில் கண்டதும் தண்டின் அடியில் தண்டு போல் ஒட்டிக் கொண்டு இருக்கும்.

இப் புழுவின் தாக்கம் ஒரு பீடையாக விளங்காததற்கு, அதன் இயற்கை எதிரிகள் சிறப்பாக இயங்குவது ஒரு காரணமாக இருக்கலாம். ஆனால் இப் பீடை திடீர் எனப் பெரும் தொகையில் தோன்றும்போது அதனால் ஏற்படும் சேதத்தை உடனடியாகக் கட்டுப்படுத்த இவ்வுயிரியல் முறை உதவா. ஆனால் குடம்பிகள் காணும் வேளையில் கையினால் பொறுக்கி எடுத்து அழித்து விடுவதன் மூலம் அவற்றை இலகுவாகக் கட்டுப்படுத்தலாம். தாக்கம் அவதானிக்கப்படும் இடங்களில் நெருப்பை எரிப்பதன் மூலம் அந்துக்கள் கவரப்பட்டு அதில் வீழ்ந்து சாகடிக்கச் செய்யலாம். அத்துடன் தாக்கம் கூடக் காணப்படின்,

மொனோகுரோட்டோபொஸ் 60. E. C. நாசினியை விசிறி கட்டுப்படுத்தலாம் (ஏக்கருக்கு 10-15 கி. அவு 40 கலன் நீரில் கலந்து ஒரு அவு. நாசினி — 4 கலன் நீர் வீதம் கலந்து )

**க. ப. பத்மநாதன்**

---

## ஞான சஞ்சீவி

(3ம் பக்கத் தொடர்ச்சி)

கிறோம்.

விலங்கினங்களின் உணர்வு நிலையை அறிவு என்று குறிப்பிடப்படுகிறது. புலிக்கொரு குணம், யானைக்கொரு குணம், நாய்க்கொரு குணம், பூனைக்கொரு குணம் என்று தனித் தனி உணர்வு நிலைகளைக் காணக் கூடியதாயிருக்கின்றது.

இவ்வாறாக பூச்சிகள், புழுக்கள், ஊர்வன நீர் வாழ்வன எல்லாவற்றுக்கும் தனித்தனி உணர்வு நிலைகள் இருப்பதால் தான் அவையெல்லாம் இயற்கையின் திட்டத்தில் தங்கள் கடமைகளைப் புரிந்துகொண்டே படிப்படியாக உயர்வு பெறுகின்றன.

இவ்வாறாக பரிணாம வளர்ச்சிபெற்று உயர்ந்த நிலையை எய்திய மனிதனின் உணர்வு நிலையை மனசு என்று கூறப்படுகிறது.

பரிணாம வளர்ச்சி என்னும் ஏணியின் மனிதன் மேற்படியில் நிற்கவில்லை. நடுவிலேதான் நிற்கின்றான். பரப்பிரம்மத்தை அடையும் வரை அவனுக்கு வளர்ச்சியுண்டு என்று இந்துமதம் கூறுகின்றது. ✶

---

## நினைவில் நிலைத்து நிற்பவன்

### நீத்தார் புகழாரம்

செல்வன் பொன்னம்பலம் விபுலானந்தன் எம்மையெல்லாம் விட்டுப் பிரிந்து ஒன்றரை மாதங்களாகி விட்டாலும் என்றும் எங்கும் புன்சிரிப்பு தவழ்ந்து கொண்டிருக்கும் அவனுடைய அந்த அழகு முகத்தை, இனிமையான பண்பை எம்மால் மறக்கவே முடியாது.

இளம்பிராயத்திலேயே யாழ் மத்திய கல்லூரியிலே இணைந்து கொண்ட செல்வன் விபுலானந்தன் கல்லூரியின் சகல துறைகளிலுமே தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டான் கல்லூரி மாணவர் தலைவர்களுள் ஒருவனாய், லியோ கழகத்தின் பொருளாளனாய், செயலாளனாய், முதலுதவிப்படை இயக்குனர்களில் ஒருவனாய், கல்லூரியின் கூடைப்பந்தாட்டக் குழுவின் வீரனாய், சாரணர் படையின் அங்கத்தவனாய் இப்படியாக கல்லூரியின் ஒவ்வொரு துறையிலுமே தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கல்லூரியின் வளர்ச்சியில் பெரும் அக்கறையும், ஆர்வமும் கொண்டிருந்தான். அது மட்டுமல்ல மிகவும் இனிமையாக எல்லோரிடத்தும் பழகும் இவன் கல்லூரி அதிபர், ஆசிரியர், மாணவர், பழைய மாணவர்கள் ஆகிய எல்லோரிடத்தும் நன்மதிப்பையும் பெற்றிருந்தான்.

கல்லூரி வளர்ச்சியில் மட்டுமல்ல, இசைத் துறையிலும் அவன் கொண்டிருந்த ஈடுபாடும் அதன்மேல் அவனுக்குள்ள அபிமானமும் குறிப்பிடத்தக்கது. 'நோர்த் ஸ்ரார்' இசைக் குழுவின் மிருதங்கக் கலைஞனாய் ஏராளமான மேடைகளில் பல நெஞ்சங்களை நெகிழ வைத்தான். கல்லூரியின் சகல விழாக்களிலுமே தன்னுடைய கலைத்திறனால் எல்லோரையும் மகிழ வைத்தான்.

ஒரு சிறந்த பண்பாளன் சமூக சேவையாளன், விளையாட்டு வீரன், இசைக்கலைஞன், விடுதலை வீரன், எம்மை விட்டுப் பிரிந்தாலும் அவனுடைய நினைவுகள், எண்ணங்கள் என்றுமே எம்மை விட்டகலாது. ✶

✶ லியோ ரீ. கே. ஆர்.

---

### 1964 ஆம் ஆண்டு நிலையத் தலைவராக இருந்த அமரர் சவிரிமுத்து செபஸ்தியாம்பிள்ளை (பிரான்சிஸ்) ஞாபகார்த்தமாக றெக்கிளமேசன் சனசமூக நிலையம் நடாத்தும்

## பொது அறிவுப் போட்டி

1. தற்போதைய பாப்பரசரின் பெயர் என்ன?
2. தற்போது உலகில் நிறவெறிக் கொள்கையைக் கடைப்பிடிக்கும் ஒரு நாட்டுக்கு எதிராக பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டுள்ளது. அந்த நாடு எது?
3. 7 நாடுகளின் கூட்டமைப்பு மகாநாடு அண்மையில் பெங்களூரில் நடைபெற்றது அந்தக் கூட்டமைப்பின் பெயர் என்ன?
4. யாழ்நகரில் உதித்து, அண்மையில் ஒரு வருடம் பூர்த்தி செய்த பத்திரிகை எது?
5. ''ஏசியாட்டில்'' அதிக தங்கப்பதக்கங்களை பெற்ற இந்திய வீராங்கனை யார்?
6. மெக்சிக்கோவில் நடைபெற்ற உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் வெற்றி பெற்ற அணி எது? அவ்வணியின் தலைவர் யார்?
7. ''சார்ஜா''வில் நடைபெற்ற ''ஒஸ்டல் ஏசியா'' போட்டியில், இறுதி ஓவரின் கடைசிப் பந்தில் சிக்ஸர் அடித்து அணிக்கு வெற்றியீட்டிக் கொடுத்தவர் பாகிஸ்தான் வீரர். அவருக்கு கடைசிப் பந்தை வீசிய வீரர் யார்?
8. உலக அதிசயங்களில் ஒன்று இந்தியாவில் உள்ளது. அதன் பெயர் என்ன?
9. 1964-ம் ஆண்டு றெக்கிளமேசன் சனசமூக நிலையத் தலைவராக இருந்தவர் யார்?
10. தற்போது ஒரு நாட்டை பெண் ஜனதிபதி ஆட்சி செய்கின்றார்? அவரின் பெயர் என்ன? அது எந்த நாடு?

1-ம் பரிசு: ரூ. 500 2-ம் பரிசு: ரூ. 250
3-ம் பரிசு: ரூ. 125

மற்றும் ரூ. 25/- வீதம் 5 ஆறுதல் பரிசுகள்

விதிகள்; விடைகளை சாதாரண வெற்றுத் தாளில் எழுதி அனுப்பவும், ஒருவர் எத்தனை விண்ணப்பங்களையும் அனுப்பலாம். ஆனால் ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் ஒரு ரூபாய் பெறுமதியுடைய முத்திரை வைத்து அனுப்புதல் வேண்டும்.

**முடிவு திகதி: 20-12-1986**

அனுப்பவேண்டிய முகவரி:
''பொது அறிவுப் போட்டி''
றெக்கிளமேசன் சன சமூக நிலையம்,
9 A, மத்தியகிழக்கு வீதி, குருநகர்,
யாழ்ப்பாணம்.

---

## திருவருட் திறன்---

(3ம் பக்கத் தொடர்ச்சி)

மானாகிய இறைவனையும் குறிக்கிறது.

அரவம் என்றால்

குருகினம் என்ற சொல்லு பறவைகளைக் குறித்தாலும் கிலேடைக் கருத்தால் பெண்களின் கைகளுக்கு இடும் வளையல் இனத்தைக் குறிக்கும் எனவே 'குருகினம்'' என்ற சொல் உமையம்மையாரைக் குறிக்கிறது

அதேபோன்று 'அரவம்' என்னும் சொல் சத்தத்தைக் குறித்தாலும் சர்ப்பத்தையும் குறிக்கும். எனவே சர்ப்பத்தை அணிந்திருக்கும் சிவபெருமானைக் குறிக்கும். தம் தேகத்தின் அழுக்கைக் கழுவ தடாகத்திற்கு வருகிறார்கள். இறைவனைப் புகழ்ந்து நீராடி ''மும்மலங்கள்'' என்னும் அழுக்கு நீங்கவும் அங்கு வருகிறார்கள்.

'பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம் போதால் அங்கம் குருகினத்தால் பின்னும் அரவத்தால் தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால் எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த பொங்கு மடுவில்— —'

என்பது திருவெம்பாவைப் பாடல் இறைவனின் அருட்பேரொளிமயமானது அவருடைய கண்கள் மூன்று. சூரியன் சந்திரன் அக்கினி என்பன அவை. இறைவனுக்கு முன்னே எந்தப் பேரொளியும் பிரகாசிக்க மாட்டாது. அவரை வணங்கச் செல்லும் தேவர்கள் முடியில் அணிந்திருக்கும் இரத்தினக் கற்களின் பிரகாசம் மங்கிவிடுவதைப் போல இறைவனுடைய அருட் கண்ணாகிய சூரியன் தோற்ற இருள் மறைந்து நட்சத்திரங்களும் ஒளி மங்கிப்போகின்றன.

இறுதிப் பாட்டிலே இறைவனுடைய பாதங்களே படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல் அருளல் ஆகிய பஞ்சகிருத்தியங்களையும் செய்வன என எடுத்துக் காட்டப்பட்டுள்ளது எனவே ''மலவிருளிற் தூங்காமல் மன்னுபரி பாகர் அருட் செவமுழுக வருக'' எனச் செப்புவன திருவெம்பாவைப் பாடல்களாகும் ✶

---

## புதுமைக் கருத்து---

(3ம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை.

'த இன்ரபிறிற்றேஸ்' (The Interpreters) என்ற இவரது நவீனம் 'கருவற்ற புரியாத பொருள்' என விமர்சகர்களால் வர்ணிக்கப்பட்ட போதும், ஆபிரிக்க நாடுகளின் சமூக பொருளாதார பின்னணிகளை வெளிக்கொண்டு வந்தது.

சுதந்திரம் பெற்ற நைஜீரிய நாட்டில் இருந்த சமூக அரசியல் குழப்ப நிலைகளையும் நாட்டின் வளங்கள் விரயமாவதையும் கண்ணுற்ற சொயிங்கா தனது இலக்கியப் படைப்புக்கள் மூலம், நைஜீரியாவை மட்டுமல்லாது, பிற ஆபிரிக்க நாடுகளையும் தட்டி எழுப்பி, முன்னேற்றப்பாதைக்கு வழி காட்டினார்.

தனது நாட்டைக்கட்டி எழுப்பிய சிற்பிகளில் ஒருவரான சொயிங்கா இலக்கியத்திற்காக நோபல் பரிசு பெறும் 44வது இலக்கிய கர்த்தாவும் ஆபிரிக்க நாடுகளின் முன்னணி இலக்கிய கர்த்தாக்களில் ஒருவருமாவர். ✶

---

## இயற்கை எழில்---

(3ம் பக்கத் தொடர்ச்சி)

வாடி மன்னன் மீது கொண்ட காதலால்,

'தெரிகிலேன் உன்
மனம் பரிவிலோய்
உன்பால்
ஆசைநாட்டுமென்
அங்கங்களையே
பசலிரவாகத்
தகிப்பவள் வேளே"

என்று பசலை துன்றும் பெருங் காமத்தால் தவிக்கின்றாள். சகுந்தலை தன்வசம் இழந்தாள் என்றாலும் அச்சம் கொள்கிறாள். அதற்கு மன்னன் அச்சம் வேண்டாம் முறையான அறம் தெரிந்த குலபதி கண்ணுவரிஷி நமது களவியல் காதலை அறிந்து அதில் குற்றங்காணார். பல ராஜரிஷி கன்னியர் காந்தர்வமணம் புரிந்துள்ளனர். அவர் தந்தையர் அதற்காக மகிழ்ந்தனரே அன்றி குற்றம் காணவில்லை என்கிறான்.

நமது நெறிமுறை, ஒழுக்கம், வீரம், கற்பு, காதல் முதலிய பண்புகள் இலக்கியங்களோடு சுடர் விட்டுக்கொண்டிருக்கின்றன. ஈராயிரம் வருடங்களுக்கு முன் பாகத் தோன்றிய தமிழ் மொழி இலக்கியங்கள் இன்றும் புதுமைப்பொலிவுடன் துலங்கிக் கொண்டிருக்கின்றன.

ஒரு நாட்டினரின் இலட்சியங்களை இலக்கியமே போற்றிப் பாதுகாத்து வந்திருக்கின்றது. மக்கள் மடியலாம். மகத்தான இலட்சியம் மடிய முடியாது. ✶

---

## கிராமத்து விலக்குப் பிடிக்கும்---

(3ம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை. டில்லியிலிருந்து தொலைபேசி, கோயம்புத்தூரிலிருந்து தொலைபேசி நாடகங்கள் நடைபெறும் பொழுது இங்கு நாம் அழிந்து கொண்டிருக்கிறோம்.

கிராமத்தில் இருவருக்குள் சண்டை நடைபெறும் பொழுது, நமக்கு வேண்டாத ஒருவரை ''விலக்குப் பிடிக்கிற'' மாதிரி இறுக்கிப் பிடிக்க மற்றவர் விளாசி விடுவதைப்போல எமது போராளிகளை இந்தியா கட்டுப்படுத்த இங்கு லலித் விளாசப் பார்க்கிறார். போராளிகளைக் கட்டுப்படுத்திய அன்றே இராணுவ முகாம்களை மூடுமாறு இலங்கை அரசிற்கும் வற்புறுத்தி இருக்க வேண்டும். உண்மை மத்தியஸ்தம் அதுவே. இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒரு குறிப்பிட்ட கால எல்லையை வகுத்து அதற்கான முடிவு காணுமாறு இலங்கையை நிர்ப்பந்திக்க வேண்டும்.

[illegible] படையைப் பற்றியும் ஒரு [illegible] மாத நடவடிக்கைகள் பற்றி மத்திய அரசும், மாநில அரசும் பொறுப்பேற்கவில்லை. பொலிஸ் அதிகாரிகளே தன்னிச்சையாக நடவடிக்கை எடுத்தார்களா? சென்னையில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் மூலம் தமிழ்நாட்டு பொலீஸ் படைக்கு கையூட்டப்படுகிறதா என்ற சந்தேகமும் எழுகிறது. மேலிடத்து உத்தரவு இல்லாமல் தமிழ்நாட்டு பொலீஸ் படை இப்படித் [illegible] எடுக்கவேண்டிய காரண [illegible] ஆடியில் கச்சதீவிற்கு மீன்பிடிப்படகுகள் வருகின்றன; ஆவணிக்கு சுப்பிரமணிய சுவாமி படையுடன் வருகிறார்; நெடுமாறன் கடலைத் தாண்டுகிறார், என்ற உணர்ச்சிவசமான பத்திரிகைச் செய்திகள் எமக்கு உதவமாட்டா.

உருப்படியான ஆதரவை தமிழ்நாடு மூலமாய் மத்திய அரசைக் கேட்க வேண்டும். பயன்தராது என்று கண்டால் வாழ்ந்தாலும் சரி, தாழ்ந்தாலும் சரி நாமே எமது மண்ணில் நின்று போராட வேண்டும்.

கூட்டணித் தலைவர்களாயினும் சரி, போராளிகளாயினும் சரி தமிழ் நாட்டில் கூடாரமடித்து நிற்காமல் ஒரே கொள்கை, ஒரே அமைப்பு, ஒரே தலைமை என்ற கோட்பாட்டுடன் எமது மண்ணிற்குத் திரும்பவேண்டும்.

அழுதும் அழுதும் அவளே பெறவேண்டும். அழிந்தும் அழிந்தும் நாமே போராட வேண்டும்; எம் கண்ணினும் இனிய சுதந்திரத்திற்காக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிருன்
மாணவ மணிகளே!
பாடசாலை விடுமுறை நாட்களில் அறிவு நூல்களைப் படித்துப் பயன் பெறுங்கள். 10 மில்க்வைற் நீலசோப் அல்லது 2 சலவைப் பவுடர் மேலுறைகளை அனுப்பி ஔவையார் அருளிய 'நல்வழி' என்ற சிறந்த நூலைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
மில்க்வைற்-யாழ்ப்பாணம்.

சஞ்சீவி
13 - 12- 1986 சனிக்கிழமை

ஒலிவ் ஸ்நானப் பவுடர்
நீராடி மகிழ நேர்த்தியான
ஒலிவ் பவுடர்
உயர்ந்த ஆயுள்வேத மூலிகைகள் சேர்த்து நீண்ட காலமாகத் தயாராகி வருகிறது.
பூரண தேக ஆரோக்கியத்திற்கு சிறந்தது.
மில்க்வைற்-யாழ்ப்பாணம்.

# கறைபடியாத கையானல் அமெரிக்காவில் விவாதம் ஏன்?

## வெந்த புண்ணில் வேல்பாய்ச்சுவதும் மனித உரிமை மீறல் தானே!

அங்கு ஒரு பேச்சு; இங்கு ஒரு பேச்சு.

அமைச்சர் அத்துலத் முதலி இன்று அமெரிக்காவில் பேசுகிருர்.

அடுத்த புதன்கிழமை இந்தியக் குழுவுடன் கொழும்பில் பேசுவார்.

இதைத் தான் அங்கு ஒரு பேச்சு; இங்கு ஒரு பேச்சு— என்று மேலே குறிப்பிட்டோம். வேறு அர்த்தத்தில் அல்ல.

தீவிரவாதிகளின் பொய்ப் பிரசாரங்களுக்கு 'நொக் அவுட்' கொடுக்கவே அமெரிக்கா செல்கின்றேன்— அமைச்சர் கட்டுநாயக்காவில் வைத்து செய்தியாளர்களிடம் இப்படித் தெரிவித்தார்.

'லங்கா புவத்'துக்கு சொந்தமான அரசில் உள்ள அமைச்சருக்கு 'உண்மைகள்' எல்லாம் பொய் போல் தெரிவதில் வியப்பேதும் இல்லை அல்லவா!

### உண்மைகள் பொய்கள்

'பொய்களை' 'உண்மைகளாக' ரசவாதம் செய்வது கொழும்புடன் நின்றுல் காணுது.

உலக அரங்கிலேயும் செய்துகாட்ட வேண்டும் என்ற எண்ணத்தில் அமைச்சர் அமெரிக்கா சென்று இருப்பதுதான் முக்கியமானது.

அரச படையினரால் கைது செய்யப்படுபவர்கள் 'காணுமல் போகச் செய்யப்படும்' நாடுகளின் பட்டியலில் இலங்கையையும் சர்வதேச மன்னிப்புச்சபை சேர்த்துக் கொண்டதுதான் அமைச்சருக்குக் கோபத்தை மூட்டிவிட்டது.

விட்டேனு பார் என்று நியூயோர்க் ஹோட்டல் ஒன்றில் இன்று (சனி) நண்பகல் சர்வதேச மன்னிப்புச் சபையின் இரண்டு முக்கிய பிரதிநிதிகளுடன் விவாதிக்கின்றர்.

இலங்கையில் இதுவரை 300க்கு மேற்பட்ட தமிழர் அரசபடையினரால் கைது செய்யப்பட்ட பின்னர் காணுமற் போய்விட்டார்கள். இதை விட பகிரங்கமாக படையினரால் கொல்லப்பட்ட அப்பாவித் தமிழர் எண்ணிக்கை வேறு.

இப்படிச் சர்வதேச மன்னிப்புச்சபை சத்தியக்கடதாசிகள் மூலமாக உலக அரங்கில் வெளிப்படுத்தியுள்ளது.

### சத்தியக்கடதாசி

இச்சத்தியக் கடதாசிகள் எல்லாம் பொய். 25 ரூபா கொடுத்தால் சத்தியக்கடதாசி தயாரித்துக் கொடுக்கும் சமாதான நீதிவான்கள்தான் நம் நாட்டில் இருக்கிருர்கள்—இப்படி வாய் கூசாமல் கூறிய அமைச்சர் அத்துலத் முதலி,

'என்னை நம்புங்கள். எமது படையினர் பிடித்த அனைவரும் உயிருடன் இருக்கிருர்கள் என்று கூறப் போகின்ருரா?'—

லண்டனைத் தலைமை அலுவலகமாகக் கொண்டு இயங்கும் சர்வதேச மன்னிப்புச்சபை ஐ. நாவின் அங்கீகாரம் பெற்ற ஒரு ஸ்தாபனம். இன, மொழி, சமய பேதம் பாராது இயங்குவது.

மனித உரிமை மீறல் எங்கு நடந்தாலும் சரி அதை வெளிப்படுத்தி தகுந்த பரிகாரம் காணும் நோக்கில் இச்சபை இயங்கி வருகிறது.

அரச படை சுட்டு ஓர் அப்பாவிஉயிரிழந்து விட்டார்; அல்லது அரச படையினரால் கைது செய்யப்பட்ட ஒருவர்

### உள்ளும் புறமும்
குறுமுனி

பின்னல் 'காணுமற் போய் விட்டார்' என்று அறிவிக்கப்படுகின்றது.

இது அந்த நபரின் மனைவி, உறவினர்களுக்கு பெரும் துயரத்தைக் கொடுக்கிறது.

அரசின் செயலால் அப்படி அவர்கள் துயருறுவது கூட மனித உரிமை மீறல் சம்பவமே என்று ஐ. நா. வின் மனித உரிமை சாசனம் கூறுகின்றது.

அப்படித் துயருறும் குடும்பங்களுக்கு அரசு தக்க நிவாரணம் வழங்க வேண்டும் என்றும் மனித உரிமை சாசனம் வலியுறுத்துகின்றது.

அந்த மனித உரிமை சாசனத்தில் கையெழுத்திட்டுள்ள இலங்கையின் அமைச்சர் ஒருவர் அமெரிக்கா சென்று வாதிடுகிருர்.

கைது செய்யப்பட்டவர்கள் அப்படி காணுமற் போகவில்லை, அப்பாவித் தமிழர் வேண்டும் என்று படையினரால் சுட்டுக் கொல்லப் படவில்லை.

இப்படி எல்லாம் வாதிடுவார் என்பது தெரிந்த விஷயம்.

### வெந்தபுண்ணில் வேல்

பாதிக்கப்பட்ட உள்ளங்களில் இது 'வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதுபோல்' இருக்காதா?

இது கூட மனித உரிமை மீறல் ஆகிவிடுமே!

கைதான தமிழர்களின் மனைவிமார்கள், பெற்ரோர்கள், உறவினர்கள் ஆயுதப்படையின் முகாம்கள் முன்னே கண்ணீரும் கம்பலையுமாக நிற்கும் காட்சியைத் தினமும் காண முடிகின்றது.

எங்கே எனது கணவன், எங்கே எனது மகன் என்று கேட்பவர்கள் எண்ணிக்கை தான் அதிகமாகி வருகின்றது.

சர்வதேச மன்னிப்புச் சபை அதிகாரிகள் குழு ஒன்றை நேரில் வந்து பாருங்கள்; விசாரியுங்கள் – இப்படிக் கேட்பது தானே மனிதத்தன்மை நிறைந்த ஓர் ஆட்சியின் கடமை.

ஒருவரது கை சுத்தமாக இருப்பின் இரத்தக் கறை படியாததாக இருப்பின் அவர் ஏன் பயப்பட வேண்டும்!

அமெரிக்க ஹோட்டலுக்குப் போய் சத்தம் போட்டுப் பேசவேண்டிய அவசியமே இல்லையல்லவா!

மன்னிப்புச் சபை அதிகாரிகளை இங்கு வந்து பார்வையிட அனுமதிப்பின் இலங்கையின் வாதம் 'நொக் அவுட்' ஆகிவிடும் என்ற அச்சமோ?

நடந்த மனித உரிமை மீறல் சம்பவங்களை நடக்கவில்லை என்று வாதிடுவதுகூட மனித உரிமை மீறல் சம்பவம் ஆகாதா?

இதை மனித உரிமை இயக்க நிபுணர்களே தீர்மானிக்க வேண்டும்.

## இணை அமைச்சர்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பர்.

அதன் பின்னர் புதுடில்லியில்இருந்து நேராக கொழும்பு வருவர் என்று அறிவிக்கப்படுகிறது.

இதனிடையில் இந்தியத் தூதர் திரு டிக்ஸிற், உத்தேச தமிழ் மாகாண சபையில் திருகோணமலையின் நிலை என்ன என்பதை விளக்கும் இலங்கையின் பிந்திய நிலைப் பாட்டை இந்திய அதிகாரிகளிடம் சமர்ப்பித்திருப்பதாகத்தெரிகிறது.

## நீத்தார் பட்டியல்

### மக்டலின் ஜோசப் (முத்தார்)

மக்டலின் ஜோசப் (முத்தார்) அவர்கள் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற ஜோசப் சவிரிமுத்து (C. G. R) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற மத்தியூ, அருட் சகோதரிகள்: மாறி (திருக்குடும்ப கன்னியர் மடம், லோறிஸ் வீதி, பம்பலப்பிட்டி), வுளோரன்ஸ் (திருக்குடும்ப கன்னியர் மடம், யாழ்ப்பாணம்), எல்மோ (U S A) காலஞ்சென்ற அருட்சகோதரர்: விக்ரர் (C. S. S. R பெங்களூர்), அஞ்சலா (லீலா), ஜூஷன் ஆகியோரின் அன்புத் தாயாரும், ராணி (U. S. A), J. N. போமன் (R. L. A D. R) முல்லைத்தீவு), லீலா (றீற்ரு) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற அருட்சகோதரி: அக்குவைனஸ், காலஞ்சென்ற ஸ்ரனிஸ்லோஸ் பிலிப்ஸ், செபஸ்ரியன் சுவாம்பிள்ளை ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னரின் பூதவுடல் 13-12-86 இன்று சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு யாழ். பேராலயத்தில் திருப்பலியின் பின் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் அடக்கம் செய்யப்படும். உற்ரூர், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : J. N. போமன்


50(126) சப்பல்வீதி,
யாழ்ப்பாணம்.

### அல்லைப்பிட்டி
### இராசலிங்கம் (S.R.) குகராஜ்

இவர் இராசலிங்கம் (S. R.) (உரிமையாளர் துர்க்காஜி சென்ரர், யாழ்ப்பாணம்) செல்வராணியின் அன்பு மகனும், கமல்ராஜ் குகனி, ராஜரூபி, கார்த்திகா ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுப்பிரமணியம், பூரணம் வெற்றிவேலு காலஞ்சென்ற சொர்ணம்மா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னரின் இறுதிச் சடங்குகள் இன்று காலை 10-30 மணிக்கு அல்லைப்பிட்டியில் நடைபெறும். இவ்வறிவித்தலை, உற்ரூர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்: இராசலிங்கம் (S.R.)

3-ம் வட்டாரம்,
அல்லைப்பிட்டி.



### அமரர்
### நல்லையா மார்க்கண்டு
### அவர்களின்
### 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 25-12-1945 உதிர்வு: 25-11-1985
திதி: 13-12-1986

உலகம் போற்றும் உயர் குலச் செம்மல் உலகோர் கலங்கவும் உற்ரூர் ஏங்கவும் நட்பின் நெஞ்சங்கள் நெடுந்துயர் எய்தவும் பெரியோர் பேசியே பிரலாபிக்கவும் பிள்ளைகள் மனமது பேதுற்று அலறவும் மனமது மறுகி மனைவி கலங்கவும் குடும்பத்தார் அனைவரும் குமுறி அழவும் இவ்வுலகு அகன்று இறையடி சேர்ந்தனன்.

கறுக்காய்திவு,
பூநகரி.

மனைவி, பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

## BOOKS FOR SALE

The following valuable books are available for sale at reduced prices:-
The complete Medical Guide (640 pages)
The complete Encyclopedia of Stitchery (689 pp)
Complete Guide to Needlework (Readers Digest 540 pp)
Cook Book (New York Times 770 pp)
The Compact Edition of the Oxford Engllsh Dictionary (4116 pp 2 vols)
The Hamond World Atlas (192 pp)
Treasury of American Humour (Readers Digest: 644 pp)
Model Business Letters (530 pp)
Winning by Negotiation (276 pp)
The Language of Business (BBC: 255 pp)
Swimming (84 pp)
Best Evidence (Assassination of John F. Kennedy 747pp)
Readers Digest Condensed Books (8 vols)
And many more
dyn ads. 476, Main Street, Chundikuli, (opposite St. John's College)

## தமிழகத்தில்..

(2ம் பக்கத் தொடர்ச்சி)

சபை உறுப்பினர்கள் பதவி நீக்கம், கருணநிதி கைது ஆகிய சம்பவங்களை நோக்கும்போது எம். ஜி. ஆர். தலைமையிலான அண்ணு தி மு.க அரசுக்கு உடனடியாகத் தலையிடி திராது போல் இருக்கிறது.

அண்ணு தி. மு.க வில் இருந்து 10அமைச்சர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்ட நாட்களில் இப்போராட்டம் ஆரம்பித்திருப்பதால் ஆளும் அண்ணு தி. மு கவுக்கு எதிரான சக்திகள் மேலும் தம்மை பலப்படுத்திக் கொண்டு விட்டன என்று தெரிகிறது.

தமிழ் நாடு சட்டசபை ஏற்கனவே இந்தி ஆட்சி மொழி தொடர்பான நேருவின் உறுதி மொழி அரசமைப்பில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பி இருக்கிறது. அண்ணு தி. மு.க உறுப்பினர்களும் இந்தித் திணிப்புக்கு எதிராக பகிரங்கமாகக் கருத்துத் தெரிவித்து வருகின்றனர்.

ஆதலால் இந்தி எதிர்ப்பு உணர்வு தமிழ் நாடு எங்கும் பரவலாக இருந்து வருவது தெரிகிறது.

மத்திய அரசின் இந்தித் திணிப்பின் முழு நோக்கமும் தேசிய ஒருமைப்பாடே

தேசிய ஒருமைப்பாட்டுக்காகக் கொண்டு வரப்பட்ட இந்தி, தேசம் துண்டாடப்பட காரணமாக இருக்கக் கூடாது.

## தமிழ்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாக 19மாணவர் கைதாகினர்.

வடசென்னையில் உள்ள இந்திய எயர்லைன்ஸ் கிடங்கில் நேற்று வெடிச் சத்தங்கள் கேட்டன.

இது குறித்து பொலீஸார் விசாரணைகளை நேற்று ஆரம்பித்தனர்.

(உ-எ)

## விற்பனைக்கு

ஒரு மாதம் HY-LINE பேட்டுக்குஞ்சு விற்பனைக்குண்டு அத்துடன் ஒரு நாள் HY-LINE பேட்டுக் குஞ்சு ஒரு. நாள் Bairaha இறைச்சிக்குஞ்சு ஓடருக்கு எடுத்துக் கொடுக்கப்படும் தொடர்பு: இராசா போரேஜ் ஸ்ரோர், நெல்லியடி, (மத்தியசந்தை முன்பாக)

## நத்தார் - புது வருடத்தை முன்னிட்டு

கேக் தயாரிப்புக்குத் தேவையான இறக்குமதி செய்யப்பட்ட
சுல்தானுஸ் (Four Crown Australian)
கரண்ஸ் (Australian)
வைற் றேசன்ஸ் (with Seed & Seedless)
கறுப்பு றேசன்ஸ் (Saibras)
ஈச்சம்பழம் DATES (White)

இலங்கையில் மிகவும் முன்னேடிகளால் தயாரிக்கப்பட்ட
சாள்ஸ் தயாரிப்புகள்
(CHARLES PRODUCTS)
செரிஸ் - கண்டிபீல் ஜிஞ்சர் - சவ்சவ்
புள்தோசி - ஜாம் வகைகள்
ரவ்வை - பேக்கிங் பவுடர் - ஐசிங் சுகர்
சொவ்ற் சுகர் - கஜு - கொக்கோப் பவுடர்
ஒஸ்ரேலியா மாஜரீன்

இறக்குமதி செய்யப்பட்டதும் உள்ளூர்த் தயாரிப்பும்
● கேக் எசன்ஸ்
● கலரிங் வகைகள்

குளிர்பானத்திற்கேற்ற இறக்குமதி செய்யப்பட்டதும் உள்ளூர்த் தயாரிப்பும்
கோடியல் - எமல்சன் வகைகள் - கேக் அலங்காரப் பொருட்கள் - (Cake Decoration)
நத்தார் கேக் அலங்காரப் பொருட்கள்
நத்தார் புதுவருட அன்பளிப்புப் பொருட்கள் - நத்தார் பொதிப் பேப்பர்

ஆகிய பொருட்களை ஒரே இடத்தில் மிக மலிவாகவும் தரத்தில் சிறந்ததுமாகப் பெற்றுக்கொள்ள
தலைநகரில் தனிச் சிறப்புடன் திகழும் ஒரே ஸ்தாபனம்

# பெட்டா எசன்ஸ் சப்ளையர்ஸ்

223, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24823

தலைமை அலுவலகம்: 18/1, டாம் வீதி, கொழும்பு-12.
தொலைபேசி: 26235 & 549269

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 19 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியீட்டு திகதி: 13-12-1986
Printed and Published by Uthayan Publications (Private) Ltd. 19 Second Lane, Power House Road, JAFFNA. T'PhoneNo. 24805, 23078

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org